# உதயன்

ர் : 41
ர் : 196

புதன்கிழமை
10 ஜூன் 2026

வைகாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50





# புலிகள் மீள வரவேண்டும்; மக்கள் விருப்பம் அதுவே!

வடக்கு - கிழக்கில் சென்று கேளுங்கள்

கஜேந்திரகுமார் எம்.பி. நேற்றுக் காட்டம்

**கொழும்பு, ஜூன் 10**

**போர் முடிந்து 17 வருடங்கள் கடந்துவிட்டன. இன்றும்கூட வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடம் சென்று கேட்டால், விடுதலைப்புலிகள் திரும்ப வரவேண்டும் என்றுதான் கூறுவார்கள் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

»15



பதற வைக்கின்றது செம்மணி

## எட்டு சிறுவர்களுடைய என்புத்தொகுதிகள் மீட்பு

சிசுவின் என்புத்தொகுதி உட்பட 9 என்புத்தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று 8 சிறுவர்களின் என்புத் தொகுதி உட்பட 9 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

»15

## பயங்கரவாதத்தை ஆதரிக்கும் செயற்பாடுகளுக்கு இடமில்லை

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஆதரிக்கும் வகையில் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் அனுமதி வழங்கப்படாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

»15

கிளிநொச்சியில் சோகம்

## மின்சாரம் தாக்கி இளைஞர் இறப்பு



கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னை நீராவி நாதன்குடியிருப்பு பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிவகுருநாதன் சாரங்கன் (வயது-23) என்ற இளை

»15

## செம்மணிப் புதைகுழியில் தடயப்பொருளாக நாணயக்குற்றி!

யாழ்ப்பாணம், ஜூன் 10

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்றைய தினம் தடயப்பொருளாக நாணயக்குற்றி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

»15

## அவசரகாலச்சட்டம் மீண்டும் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 10

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான பிரேரணைக்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

»15

## ஆடி அமாவாசை தினத்தை விடுமுறையாக அறிவிக்குக!

ரவிகரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

ஆடி அமாவாசை தினத்தை பொதுவிடுமுறை நாளாக பிரகடனப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சமய

»15

## நல்லூர் மந்திரிமனை விரைவில் சீரமைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருமையைப் பறைசாற்றும் மந்திரிமனையை விரைவில் அபிவிருத்தி செய்வதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது

»15

## சுரேஷ் சாலேக்காக முன்னிலையாவோம்

நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

அரசியல் நோக்கத்துக்காகவே சுரேஷ் சாலே விசாரிக்கப்பட்டு வருகின்றார். அவருக்கு ஆதரவாக நிச்சயம்நாம்முன்னிலையாவோம் - இவ்வாறு ஸ்ரீலங்கா

»15



உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில்

## கோத்தாபயவின் பயணத்தடையே எதிரணியின் அலறலுக்குக் காரணம்

குழப்பத்துக்கு அடிபணியோம் என அமைச்சர் நளிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 10

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத் தடைகளே அனைத்துக் குழப்பங்களுக்கும் காரணம் - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைமுடிவுகளை அறிவிக்கும் வாராந்த

»15

புரச்சந்தி புராணி

"அப்போ கோத்தாவைக் காப்பாத்தத்தான் இவ்வளவு நாடகமும் கண்டியளோ"

## நாட்டின் பொருளாதாரத்தை ராஜபக்சக்களே கொன்றனர்

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10

ராஜபக்சக்கள் பொருளாதாரக் கொலையாளிகள். அந்தப் பொருளாதாரக் கொலையாளிகளால்தான் சர்வதேசநாணயநிதியத்தை

»15

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4455
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள்: 34 45 59 66
விசேட எழுத்து X

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1522
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள்: 06 42 56 59

**NLB ஜய**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0481
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள்: 7 9 7 0

**மெகா பவர்**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2561
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள்: 34 40 75 76

**மஹஜன சம்பத**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6213
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள்: 6 7 7 4 0 7

**தன நிதானய**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2243
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள்: 22 54 70 81
விசேட எழுத்து Y

**சுப தவசக்**
திகதி 09.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0329
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள்: 16 18 47

# அதிக வற் வரி விதிப்பால் ஆபரணச்சந்தை வீழ்ச்சி!

## வர்த்தகர்கள் கவலை

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிகப்படியான வற் வரி விதிப்புக் காரணமாக, உள்நாட்டு தங்க ஆபரணச் சந்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் சுமார் 75 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்பு, புறக்கோட்டை தங்க நகைக்கடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இறக்குமதி செய்யப்படும் தங்கம் மற்றும் அதற்கான வேலைக்கூலி ஆகிய இரண்டுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 18 சதவீத வற்வரி அறவிடப்படுகிறது. இவற்றுடன் மேலதிகமாக 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியும் சேர்க்கப்படு கிறது.

இதன் நேரடி விளைவாக, சந்தையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 4 இலட்சம் ரூபாவைக் கடந்து, சாதாரண பொது மக்களுக்கு எட்டாக்கனியாக மாறியுள்ளது. ஒரு பவுண் தங்கத்துக்கு வரியாக மாத்திரம் சுமார் 82,000 ரூபா அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளது. வரிச்சுமை முழுமையாக நுகர்வோர் மீதே சுமத்தப்படுவதால், பொதுமக்கள் தங்கம் வாங்குவதை முற்றாகத் தவிர்த்து வருகின்றனர். இதன் காரணமாக இலங்கையின் நகைச் சந்தை நாளுக்கு நாள் முழுமையாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

எனவே வீழ்ச்சியடைந்து வரும் இந்தத் துறையை மீட்டெடுக்க வேண்டுமாயின் மற்றும் நுகர்வோருக்குத் தகுந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டுமாயின், வற் வரி அறவிடப்படும் முறையில் உடனடி திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் வர்த்தகர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0921
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 6 3 8 8 1 6

**Super Ball**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3187
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 30 34 60 71

**சனிதா**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 11 20 23 37
வெற்றி வாரம் 5348

**SASIRI**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 1017
வெற்றி இலக்கம் 04 26 39

**லக்ன ராசி**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 23 36 39 46
சீட்டிழுப்பு வாரம் 4899

**KAPRUKA**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கம் 09 23 31 42
வெற்றி வாரம் 2363

**அத கோடிபதி**
திகதி 09.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 09 20 35 36
வெற்றி வாரம் 3013

# போலி டொலர் பெண் கைது!

கொழும்பு, ஜூன் 10

வெளிநாடு ஒன்றில் அச்சிடப்பட்ட 60 கட்டு போலி 100 டொலர் நோட்டுகளுடன் இலங்கைப் பெண் ஒருவரை மத்திய குற்றப்புலனாய்வு பணியகம் கைது செய்துள்ளது.

கொட்டிகாவத்தை பகுதியில் அமைந்துள்ள வீட்டில் வைத்தே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பணத்தொகையின் இலங்கைப் பெறுமதி 21 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போலி பண நோட்டுகளை ஒரு டொலர் 284 ரூபா என்ற வீதத்தில் மாற்றுவதற்காக தயாராக இருந்துள்ளதுடன், உள்நாட்டு வர்த்தகர்களை ஏமாற்றி இந்த டொலர் நோட்டுகளை அவர் பரிமாற்றம் செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# வாகன இலக்கத் தகடுகள் அச்சிடும் பணி ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 10

ஒரு வருடத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டிருந்த வாகன இலக்கத் தகடுகள் அச்சிடும் பணிகள் நேற்றுமுன்தினம் வேரஹெர மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வளாகத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தலைமையில் இந்தப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டன.

வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் அச்சிடும் பணி சில காலம் நிறுத்தப்பட்டிருந்தது. நாங்கள் நீண்டகாலமாக வாகன இலக்கத்தகடுகளை அச்சிடும் பணியை ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் மூலமே செய்து வருகிறோம்.

தற்போது சுமார் அச்சிடப்படாத ஆறு இலட்சம் வாகன இலக்கத் தகடுகள் தேங்கிக்கிடக்கின்றன. நாங்கள் ஒப்பந்தத்தை வழங்கிய நாளில் இருந்து கணக்கிட்டால், அச்சிடுவதற்கு சுமார் ஒன்றரை இலட்சம் வாகன இலக்கத் தகடுகள் உள்ளன. எதிர்காலத்தில் இந்தத் தேக்க நிலையை முழுமையாகத் தீர்க்க முடியும் என நம்புகிறோம் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார். (ச-இ)

# சரண குணவர்த்தனவுக்கு கடூழிய சிறைத்தண்டனை



கொழும்பு, ஜூன் 10

கையூட்டல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட சரண குணவர்தனவுக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் ஒரு வழக்கில் 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் 600,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கையூட்டல் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் வழக்கு ஒன்றிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில், அந்த நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக, சரண குணவர்தனவுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஏ-இ)

# பணச்சலவைதிருத்தச்சட்டவரைவு விசேட பெரும்பான்மையும் தேவை

## உயர்நீதிமன்றின் தீர்மானம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

பணச்சலவைத் தடுப்பு திருத்தச் சட்டவரைவின் சில சரத்துகளுக்கு விசேட பெரும்பான்மை தேவைப்படுவதைத் தவிர, ஏனைய பகுதிகளை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். இருப்பினும், முன்மொழியப்பட்டவாறு இந்தச் சரத்துகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால், அவற்றை சாதாரண பெரும்பான்மையுடனும் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது. பணச்சலவைத் தடுப்பு திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக, அரசியலமைப்பின் 121(1) ஆம் பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்தில் சவால் விடுக்கப்பட்டிருந்த நிலையில், உயர்நீதிமன்றம் தனது தீர்மானத்தை அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொலிஸாரெனக் கூறி இணையத்தில் மோசடி



## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 10

**உயர் பொலிஸ் அதிகாரிகளைப் போன்று ஆள்மாறாட்டம் செய்து, வட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக பணமோசடிகள் அதிகரித்து வருவதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மோசடியாளர்கள் உயர் பொலிஸ் அதிகாரிகளின் புகைப்படங்கள் மற்றும் அடையாளங்களைப் பயன்படுத்திபோலிக் கணக்குகளை உருவாக்கி வருகின்றனர்.

பின்னர் தொலைபேசி அழைப்புகள், வட்ஸ் அப் செய்திகள் மற்றும் டெலிகிராம் ஊடாகபொதுமக்களைத் தொடர்பு கொள்கின்றனர்.

பாதிக்கப்படுபவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டப்பட்டோ, அவர்களிடம் இருந்து பணம் அல்லது நிதி பங்களிப்புகளை மோசடியாளர்கள் கோருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சந்தேகத்துக்கிடமானமுறையில் வரும் இத்தகைய தொடர்பாடல்களை உடனடியாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-இ)

# விமல் வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 10

அமைச்சராகப் பதவிவகித்த காலப்பகுதிக்குள் சட்டவிரோதமாக 75 மில்லியனுக்கும் அதிகமான தொகையைச் சம்பாதித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகள் ஜூன் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி முஹம்மத் மிஹால் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

# மருத்துவமனையில் சுரேஷ் சாலே

கொழும்பு, ஜூன் 10

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள முன்னாள் உளவுத்துறைப் பிரதானி சுரேஷ் சாலே கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் தான் முன்னெடுத்துள்ள உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தொடரும் என அவரைச் சந்தித்த சட்டத்தரணிகளிடம் அவர் குறிப்பிட்டுள்ளார். சுரேஷ் சாலே தொடர்ச்சியாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில், அவரது உடல்நிலையில் ஏற்பட்ட பலவீனம் காரணமாக அவர் சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார் என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. (ச-இ)



# ஹோட்டலில் தீ; நால்வர் காயம்

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு தலவத்துகொட பகுதியில் உள்ள ஹோட்டலொன்றில் நேற்றுத் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் நான்கு பேர் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எரிவாயு கசிவின் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தலவத்துகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## சுரேஷ் சாலே விவகாரம்

# ம.உ.ஆணைக்குழு சி.ஐ.டி.க்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 10

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே தொடர்பான விசாரணைகள் மற்றும் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலைமைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளை இந்த வாரத்துக்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுரேஷ் சாலேவின் உறவினர்களினால் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட முறைப்பாட்டின் அடிப்படையில், மனித உரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அதன் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ச-இ)

# ரயிலுடன் ஓட்டோ மோதுண்டு விபத்து

## இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 10

கப்புவத்தை மற்றும் கந்தானை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியிலுள்ள ரயில் கடவையில் சிலாபத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலுடன் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)




# பாட்டும் பயங்கரமும்!

திசைகாட்டி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில பிடிச்சு வைச்சிருக்கிற பாட்டுக்காரப் பெடியனை விடுவிக்கச் சொல்லி எல்லா இடங்களிலையும் தெட்டம் தெட்டமா ஆர்ப்பாட்டம் நடக்குது. கருத்துச் சுதந்திரத்தைக் காப்பாத்துவம் , பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன நீக்குவம் எண்டு சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்த திசைகாட்டி அரசாங்கம், இப்ப அதுக்கு நேர்மாறாத்தான் நடந்து கொண்டிருக்குது. சண்டை முடிஞ்சு 17 வருசத்துக்குப் பிறகும் இயக்கப்பாட்டுகளைப் பாடுறதும், இயக்கத்தின்ர பேரைச் சொல்லுறதும், தமிழீழம், வேங்கை எண்ட சொல்லுகளைப் பாவிக்கிறதும் தான் இலங்கையில பயங்கரவாதம் எண்டு திசைகாட்டிக்காரர் குத்திமுறியினம். அதைவிட இப்பிடி பாட்டுகளால புலியள் திரும்ப உருவாகிவிடுவினம் எண்டும் சொல்லி, தாங்கள் அந்தப் பாட்டுக்காரப் பெடியனைப் பிடிச்சது சரிதான் எண்டு கடும் முட்டுக் குடுக்கினம் திசைகாட்டிக்காரர்.

அதிலையும் யாழ்ப்பாணத்து இளம் திசைகாட்டி எம்.பியின்ர உருட்டு வேற ரகம். "அவரைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில பிடிச்சது கவலைதான். ஆனாலும் பிடிச்ச பிறகுதான் இப்பிடியொரு பாட்டுக்காரர் இருக்கிறார் எண்டு கனபேருக்குத் தெரிய வந்திருக்குது. அப்ப இந்தக் கைதால அவர் பேமஸானதை நினைச்சு ஆறுதல்படோணும்" எண்டு அவர் போட்ட போடில திசைகாட்டிச் சமஸ்தானமே ஆடிப்போட்டுது. அப்ப பயங்கரவாதத் தடைச்சட்டத்தில ஆக்களைப் பிடிக்கிறது அவையளைத் தண்டிக்கிறதுக்கு இல்லை, அவையளைப் பேமஸாக்கி விடத்தான் எண்ட உண்மை இந்த எம்.பி. சொன்ன பிறகுதான் சனத்துக்குப் தெரிய வந்திருக்குது. எப்பேர்ப்பட்ட தன்னலமில்லாத சேவையை உந்தத் திசைகாட்டி அரசாங்கம் செய்யுது. தங்கட ஆளணி, அம்பு எல்லாத்தையும் பாவிச்சு ஒருத்தரை மினக்கெட்டு அரஸ்ட் பண்ணி, அவரைப் பேமஸாக்கிற 'மார்க்கெட்டிங்' வேலையை ஒரு சதம் கூட வாங்காமல் திசைகாட்டி அரசாங்கம் செய்யிறதைப் பாராட்ட வேணுமே தவிர அதுக்கு எதிராப் போராடக்கூடாது.

பட்சிக்கு என்ன ஆசையெண்டால், இதே இளம் எம்.பி.யையும் அரசாங்கம் ஒருக்கா பேமஸாக்கி விடோணும். ஏனெண்டால் முந்தி எலக்சன் காலத்தில "தேசியத்தலைவருக்கு சிலை வைப்பம், மாவீரர் மயானங்களை புனரமைப்பம்" என்டெல்லாம் வரியள் உள்ள பாட்டுகளைக் காசுகுடுத்து செய்விச்சு, அதை தங்கட திசைகாட்டிச் சின்னத்தோட தன்ர பேஸ்புக்கில போட்டு வாக்குக் கேட்டுத்தான் உவர் வெண்டவர். அப்ப அவரையும் ஒருக்கா உள்ளுக்க போட்டு. பேமஸாக்கினால் அடுத்தமுறையும் ஈஸியா வெல்லுவார் எல்லோ. ஆனால் உந்த எம்.பி. "நாங்கள் ஒண்டும் அப்பிடிப் பாட்டுப் போடேலை. ஆதாரமிருந்தால் காட்டுங்கோ" எண்டு சவால் விட்டவர். பேஸ்புக்கில போட்டதை அழிச்சால், அதை எடுக்கேலாது எண்டு சின்னப்பிள்ளை மாதிரி நினைச்சிட்டார் போல. அவர் அழிக்கமுதலே கனபேர் அதை ஸ்கிரீன் ஷொட் எடுத்து வைச்சிட்டினம் எண்டது அவருக்குத் தெரியேலை. பாவம் இதுக்காக அவரைக் குறை சொல்லேலாது . ஏனெண்டால் பானைக்குள்ள இருந்தால் தானே அகப்பையில வரும் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கண்ணிவெடி அகற்றலில் இலங்கை முன்னேற்றம்



## சுவிஸ் தூதுவர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில், இலங்கை மிகச் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்று இலங்கையிலிருந்து விடைபெற்றுச் செல்லும் சுவிஸ்லாந்து தூதுவர் சிறி வோல்ட் பாராட்டினார்.

தூதுவருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு, ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சந்திப்பில் சுவிஸ்லாந்து அரசாங்கத்தால், வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களுக்கு ஆளுநர் நன்றி தெரிவித்தார். மத்திய கிழக்குப் போர் காரணமாக உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றம் மற்றும் அதனால் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் தூதுவர் கேட்டறிந்தார். இதனால் வடக்கு மாகாணசபையால் ஆரம்பிக்கப்பட்ட பெருமளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மீள்மதிப்பீடு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து வடக்கு மாகாணத்தின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்துறையின் தற்போதைய செயற்பாடுகள், சந்தையில் பொருள்களின் விலைத்தளம்பல் மற்றும் அதனால் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், சிக்கல்கள் தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடினர். (க-113.66)

# படகுச்சேவைகள்

## நேற்றுமுன்தினம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடற்கொந்தளிப்புக் காரணமாக, தீவகத்துக்கான படகுச்சேவைகள் நேற்றுமுன்தினம் இடம்பெறவில்லை. இதனால் அரச அலுவலர்கள் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தனியார் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் காலை ஊர்காவற்றுறை மற்றும் குறிகாட்டுவான் இறங்குதுறைகளுக்குச் சென்றவேளை, படகுச்சேவைகள் இடம்பெறாமையால் ஏமாற்றமடைந்தனர். சனி, ஞாயிறு விடுமுறையின் பின்னர் கடமைக்குச் சென்றவர்களும், தமது சொந்த இடங்களுக்குச் சென்ற பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொண்டனர். (க-9)

# ஓய்வூதியத்தைப் பெறுவதில் பின்னுரித்தாளர்கள் சிரமம்

சேவையிலிருந்து ஓய்வுபெற்று 35 வருடங்களாகியும், விதவை அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் இன்னமும் கிடைக்காமையால், ஓய்வூதியர்களின் பின்னுரித்தாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். யாழ். மாநகரசபையில் கடமையாற்றிய ஓய்வூதியர் குடும்பங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. 44/90 அரசசுற்றறிக்கைப் பிரகாரம், யாழ். மாநகரசபையில் பல்வேறு பிரிவுகளில் கடமையாற்றிய நூற்றுக் கணக்கான அலுவலர்கள், சிற்றூழியர்கள் ஓய்வுபெற்றனர்.

அவர்களில் பலருக்கு விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் இன்னும் வழங்கப்படவில்லை. இவர்கள் தொடர்ச்சியாக ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

எனினும் ஓய்வூதியர்கள் தமக்கு விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் பெற்றுத் தருமாறு விண்ணப்பித்துள்ள போதிலும் பலருக்கு இதுவரை இலக்கம் கிடைக்கவில்லை. விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம், பிரதேச செயலகத்துக்கு ஓய்வூதியர்களால் வழங்கும் பட்சத்தில், ஓய்வூதியர் இறந்தால், அவரின் கணவன் அல்லது மனைவி அல்லது பின்னுரித்தாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். இந்தநிலையில் இலக்கம் கிடைக்காததால் ஓய்வூதியரை இழந்த பின்னுரித்தாளர்கள் ஓய்வூதியம் பெறமுடியாமல் அலைவதைக் காணமுடிகின்றது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் எழுத்தறிவு குறைந்தவர்கள் என்பதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பல குடும்பங்கள் ஓய்வூதியம் பெறமுடியாமல் மாநகரசபை, பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச்செயலகம் ஆளுநர் செயலகம் போன்றவற்றுக்கு அலைந்து திரிகின்றனர்.

எனவே விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் இதுவரை கிடைக்காதவர்களுக்கு, உடனடியாக இலக்கம் பெற்றுத்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (க-9)




# ஆடியபாதம் வீதிக்குக் காப்பெற்; 2 நாள்கள் போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருநெல்வேலிச் சந்தியை அண்மித்துள்ள ஆடியபாதம் வீதியின் ஒரு பகுதிக்கு, காப்பெற் இடும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் குறித்த பகுதியூடான போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் அறிவித்துள்ளார்.

ஆடியபாதம் வீதியின் புனரமைப்புப் பணிகள் நல்லூர்ப் பிரதேசசபையால் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதிக்குக் காப்பெற் இடும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதனால் வியாபார நிலையங்களுக்கு முன்னால், எந்தவொரு வாகனங்களும் நிறுத்தமுடியாது. காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர், குறித்த வீதிப்பகுதியானது உயர் அழுத்தம் கொண்ட காற்றுப் பம்பிகளைக் கொண்டு சுத்தம் செய்யப்படும். அவ்வாறு சுத்தம் செய்யப்படும் போது எழுகின்ற தூசி மண்டலத்திருந்து வியாபார நிலையங்களையும், வியாபாரப் பொருள்களையும் பாதுகாத்துக் கொள்வதற்குப் பொருத்தமான தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை வர்த்தகர்கள் மேற்கொள்ளவும்.

முக்கியமாக உணவு விற்பனை நிலையங்களில், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படாத வண்ணம், வியாபார நிலையங்களின் சுகாதாரம் தொடர்பில் மிகக்கூடிய கவனம் செலுத்தவும். இதுவரை நாளும் தாங்கள் வழங்கிய ஒத்துழைப்புப் போன்று, இறுதிக்கட்டப் பணிகளுக்கும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (க-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய நேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்**


**பொருள்:** நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

## திசைதிருப்பல் போராட்டங்கள்!

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் நீண்ட காலமாக நீடித்துவந்த சந்தேகங்களின் தொடர்ச்சியாக, புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே கைதுசெய்யப்பட்டுள்ளமை இலங்கையின் அரசியல் மற்றும் நீதித்துறையில் ஒரு திருப்புமுனையாக அமைந்திருக்கின்றது. சட்டத்தின் ஆட்சியையும், கடந்தகாலக் குற்றங்களுக்கான நீதியையும் நிலைநாட்டுவதற்கு இத்தகைய வெளிப்படையான விசாரணைகள் அவசியமானவை என்றபோதிலும், துரதிர்ஷ்டவசமாக இந்தச்சட்ட பூர்வமான கைது நடவடிக்கை, தென்னிலங்கையில் மீண்டும் ஒருமுறை குறுகிய அரசியல் இலாபங்களுக்கான இனவாதக் கருவியாக மாற்றப்பட்டு வருகின்றது.

சுரேஷ் சாலேயின் கைது இடம்பெற்ற சில மணித்தியாலங்களிலிருந்தே, தென்னிலங்கையின் தீவிரவாதப் போக்குடைய சில அரசியல் சக்திகளும் இனவாதக் கும்பல்களும் இதனை ஒரு தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும், ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு எதிரான பழிவாங்கலாகவும் சித்திரிக்கத் தொடங்கியிருந்தன. நாட்டைப் பாதுகாத்த வீரர்களைத் தற்போதைய அரசாங்கம் வேட்டையாடுவதாகக் கூறி, பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் தேவையற்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் விதைக்கும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருந்தன. இந்த இனவாதப் பரப்புரைகளின் உண்மையான நோக்கம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டைச் சிதைத்து, விசாரணைகளைத் திசைதிருப்புவதே அன்றி வேறொன்றாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் இவற்றின் பின்னணியில் கடந்த காலங்களில் - பிரதானமாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடந்தபோது -அதிகாரங்களில் இருந்தவர்களும், அவர்களின் சகாக்களுமே முன் நிற்கின்றனர்.

கடந்த காலங்களில் ஆட்சியைப் பிடிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் தெற்கில் இனவாதம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது அனைவரும் அறிந்த பரகசியம். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கூட ஆட்சியைப் பிடிப்பதற்கு நடத்தப்பட்டது என்பதுதான் இப்போதுள்ள முதன்மைக் குற்றச்சாட்டு. அந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் இத்தனை காலம் இழுத்தடிக்கப்பட்ட நிலையில், இப்போது அதன் முடிச்சுக்கள் அவிழ ஆரம்பித்திருக்கின்றன. இந்த முடிச்சுக்கள் அவிழ்வது கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு உவப்பாக இருக்காது என்பதால், மீண்டும் தங்களின் பழைய உத்தியைக் கையாண்டு, தெற்கில் உள்ள மக்களை உணர்ச்சிவசப்பட வைத்து, அரசாங்கத்துக்கு எதிராக ஒரு இனவாத அலையை உருவாக்க இந்தக் கும்பல்கள் திட்டமிட்டுச் செயற்பட ஆரம்பித்திருக்கின்றன. இத்தகைய ஆபத்தான சூழலில், தற்போதைய அரசாங்கம் எவ்வித அரசியல் அழுத்தங்களுக்கும் பணியாது, இந்த விடயத்தில் மிகவும் இறுக்கமாக மற்றும் தீர்க்கமாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் அதேநேரம் இந்த விசாரணையைக் குழப்ப முயலும் தரப்புகளை இனங்கண்டு அவர்களின் இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டியதும் கட்டாயம். இனவாதத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் மோசமான போக்கு நாட்டில் இருந்து ஒழிக்கப்படவேண்டும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்குக் கிடைக்கும் தண்டனை ஒரு பாடமாக மாறவேண்டும்.




கட்டணம் கூட்டப்பட்டாலும்

## வீழ்ச்சி அடையாத வாகன இறக்குமதி



**கொழும்பு, ஜூன் 10**
**இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வாகன இறக்குமதிக்கு கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்ட போதிலும், வாகன இறக்குமதிகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை என இலங்கை சுங்கத் துறை தெரிவித்துள்ளது.**


இதுதொடர்பில் சுங்கத்துறைப் பேச்சாளர் சந்தனா புஞ்சிஹேவா தெரிவித்துள்ளதாவது-

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்ந்து நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன. சந்தையில் விற்பனையாகாமல் பல வாகனங்கள் தேங்கியிருந்தாலும் இறக்குமதியில் எதிர்பார்த்தளவு குறைவு பதிவாகவில்லை. சுங்க வருவாயில் வாகன இறக்குமதிகள் சுமார் 30 சதவீத பங்களிப்பை வழங்குகின்றன. கடந்த ஜனவரி முதல் மே மாதம் வரை பெறப்பட்ட வருவாய் தரவுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்பட்ட பின்னரும் அரசாங்கத்தின் வருமானத்தில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை-என்றார். (எ-இ)

## யானைத் தந்த பேழையுடன் ஒருவர் கைது

யானைத் தந்தங்கள் மற்றும் சந்தன மரத்தைக் கொண்டு நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்ட பேழை ஒன்றை விற்பனை செய்ய முயன்ற ஒருவர், வனவிலங்கு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹொரகொல்ல தேசிய பூங்கா அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையில் சந்தேகநபர் நிட்டம்புவவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 9 இல்

கொழும்பு, ஜூன் 10
2026ஆம் ஆண்டுக்குரிய தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பரீட்சையின் இரண்டாம் பகுதி வினாத்தாள் அன்றைய தினம் முற்பகல் 9.30 மணி முதல் 10.45 மணி வரை நடத்தப்படும்.

முதலாம் பகுதி வினாத்தாளை முற்பகல் 11.15 மணி முதல் பிற்பகல் 12.15 மணி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## ஐஸ் போதையுடன் பெண் கைது

கொழும்பு, ஜூன் 10
கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு ரயிலில் 25 கிராம் ஐஸ் போதைப் பொருளை வியாபாரத்துக்காக எடுத்துச்சென்ற பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தெரிவித்துள்ளார். (ச-இ)

## சுற்றிவளைப்புகளில் 619 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூன் 10
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 619 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் 28,295 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில், குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 257 பேரும், திறந்த பிடியாணைகளின் அடிப்படையில் 140 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 70 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 130 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களுடன் தொடர்புடைய 4,241 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
வியாழக்கிழமை- வைகாசி 28
11.06.2026
சுபநேரம் : 07.22 – 08.52
ராகுகாலம் : 01.22 – 02.52




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பயங்கரவாதத் தடைச்சட்டம் அரசாங்கம் இரட்டைவேடம்!

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 10

**இன்றைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது இதே பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடியது. அதனை முழுமையாக இல்லாமலாக்குவோம் என உறுதியளித்துத்தான் நாட்டு மக்களின் ஆணையினைப் பெற்றது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அதே கொடூரச்சட்டத்தின் வாயிலாகத் தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்குவதற்கு தற்போதைய அரசு தீவிரமாக முயற்சிக்கின்றது.**

இவ்வாறு பாடகர் சங்கீத்தன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளமையைக் கண்டித்து, வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற போராட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது- பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம், அச்சட்டத்தினை நீக்காது மீளவும் தமிழ் மக்களின் மீது பிரயோகிப்பதனை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. அரசியல் காரணங்களுக்காகவும் தங்களின் சுயதேவைகளுக்காகவும் அரசாங்கம் தமிழ்த் தேசிய விடுதலைப் பாடல்களைப் பயன்படுத்தியமை யாவரும் அறிந்த வெளித்தெரிந்த உண்மையாகும். ஆனால், ஒரு கலைஞன் மீது பயங்கரவாதச் சட்ட ஏற்பாடுகளை அரசு பிரயோகித்திருப்பது அப்பட்டமான பழிவாங்கல் உதாரணமாகும். தற்போதைய அரசாங்கம்தன் தார்மீகத்தகுதியை முழுமையாக இழந்துள்ளது- என்றார். (ச)



# திறைசேரியின் நிதி விவகாரத்தில் இலங்கை மத்திய வங்கி பொறுப்பு

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் காணாமல் போனமைக்கு மத்திய வங்கியும் பொறுப்புக்கூறவேண்டும் என நிதியமைச்சின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதாக அரசாங்க நிதிப் பற்றிய குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் காணாமல்போனமை குறித்துக் கலந்துரையாடுவதற்காக, நாடாளுமன்றத்தின் அரசாங்க நிதிப் பற்றிய குழு நேற்றுமுன்தினம் கூடியது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காகத் திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த நிதிக்குளறுபடிச் சம்பவம் தொடர்பில் திறைசேரியால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள விசேட அறிக்கை குறித்து குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் திறைசேரியின் அறிக்கை முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் அதன் பின்னணி தொடர்பாக மத்திய வங்கியின் நிலைப்பாட்டை அரசாங்க நிதிப் பற்றிய குழுவுக்கு அறிவிப்பதற்காக, மத்திய வங்கிக்கு ஒரு வார காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# மக்கள் காணிகளை அபகரித்து இராணுவத்தினரோ சுகபோகம்

## ரவிகரன் எம்.பி.விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தமிழ் மக்களது பூர்வீகக் காணிகளை அபகரித்து இராணுவத்தினர் சுகபோகம் காண்கின்றனர். இந்த நிலைமை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் உள்ளன. இதற்கு ஒரு தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

மயிலிட்டி மக்களால் தமது காணிவிடுவிப்பை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 1986ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு, மயிலிட்டியில் வாழ்ந்த மக்களை இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

தமது பூர்வீக வாழ்விடங்களிலிருந்து இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட மக்களை, மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, வீதிகளில் இறங்கி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அரசாங்கம் எமது மக்களுக்குச் செய்யும் கொடுமையிலும் கொடுமையான செயற்பாடாகவே இதனைக் காண்கின்றோம்.

கடந்த கால அரசாங்கங்கள் இந்த மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே தற்போதைய ஆட்சியாளர்களாவது, தங்களை தமது பூர்வீக வாழ்விடங்களில் மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்பதே மக்களின் கோரிக்கையாகவுள்ளது. இராணுவத்தினர் தங்கிவிட்டுச் செல்வதற்காகவே இங்கு பங்களா அமைக்கப்பட்டுள்ளதாக எம்மால் அறிய முடிகின்றது. மக்களின் பூர்வீகக் காணிகளை ஆக்கிரமித்து, பங்களா அமைத்து இராணுவத்தினர் சுகபோகம் காண்கின்றனர். இதேபோன்ற கொடுமைகள் முல்லைத்தீவில் கேப்பாப்புலவு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, வட்டுவாகல் உட்பட பல இடங்களில் இடம்பெறுகின்றன. மன்னாரில் முள்ளிக்குளத்திலும் இதேபோன்ற கொடுமைகள் இடம்பெறுகின்றன. எமது மக்களுக்குத் தொடர்ந்தும் இவ்வாறான கொடுமைகள் இழைக்கப்பட்டால், உங்களுக்கும் கொடுமையான நிலைகள் ஏற்படும். என்றார். (க246)

# பௌத்த சாசன அழிவைத் தடுக்க சட்டத்திருத்தங்கள் அவசியம்

## சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10

பௌத்த சாசனத்துக்கு ஏற்பட்டு வரும் சீரழிவைத் தடுப்பதற்காக விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று மல்வத்தை பிரிவின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார். பௌத்த துறவிகள் ஒழுக்கக்கோவை ஒன்றைத் தயாரிப்பதற்காக மல்வத்து மகாநாயக்கரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பௌத்த பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மகா சங்கத்தினர் பல சுற்றுப்பேச்சுகளை நடத்தியபோதிலும், அந்த முயற்சியை வெற்றிகொள்ளமுடியாமலபோனது. அதன் விளைவுகளையே தற்போது காணக்கூடியதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




# மக்கள் மீது பொறியும் பொருளாதாரச் சுமை!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

நாடு மீளச் செலுத்தவேண்டிய கடன் தொகை ரூபாவில் பன்மடங்காக அதிகரித்து. அதன் ஒட்டுமொத்த சுமையும் மக்கள் மீதே சுமத்தப்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

டொலரின் பெறுமதி உயர்வடைந்து செல்வது நாட்டின் பொருளாதாரத்துக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என எந்த அடிப்படையில் பிரதி நிதியமைச்சர் கூறுகின்றார்? அவர் கூறுவது உண்மையெனில் எதற்காக நாளுக்கு நாள் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது? வரும் நாள்களில் அத்தியாவசியப்பொருள்களின் விலையும் உயர்வடையும் எனக் கூறப்படுகிறது. டொலரின் பெறுமதி உயர்வடையும்போது, நாம் மீளச் செலுத்த வேண்டிய கடன்தொகை ரூபாவில் பன்மடங்காக அதிகரிக்கும். இந்தச் சுமை முற்றுமுழுதாக மக்கள் மீதே சுமத்தப்படும்.

எனவே தயவுசெய்து நாட்டு மக்களிடம் உண்மையைக் கூறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதன் பின்னர் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைவரும் இணைந்து தீர்மானங்களை எடுக்கமுடியும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்சராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒரு வருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**அளவான ஆசையும் குறைவான தேவையும் நிறைவான வாழ்க்கைக்கு வழி என்பதை உணர்ந்து எப்போதும் எதார்த்தமான வாழ்க்கையை வாழும் தனுசு ராசிக்காரர்களே!**

குருபகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார். எட்டில் சென்று மறைவதால், எந்தச் செயலையும் நிதானத்துடன் கையாண்டாலே போதும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட கோணத்தில் யோசித்து தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் அமைதி இருக்கும். எனினும் கணவன் - மனைவிக்குள் சின்னச்சின்ன பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போகவும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளைத் தவிர்த்து விடுங்கள். பிள்ளைகள் கேட்டுவிட்டார்களே என்று கையிருப்பைக் கரைக்காதீர்கள்.

பேச்சிலும் செயலிலும் நிதானம் அவசியம். சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். போலியான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து மாட்டிக் கொள்ளாதீர்கள். வீண்பழிகள், அவச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். திடீர் பயணங்கள் இருக்கும்.

**குரு பகவானின் பார்வை பலன்கள்:**
குரு பகவான் 2ஆம் இடத்தைப் பார்ப்பதால், கம்பீரமாக பேசுவீர்கள். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. எதிர்பார்த்தபடி பணவரவு இருக்கும். அத்தியாவசியப் பொருள்களை வாங்குவீர்கள்.

குருபகவான் 4ஆம் இடத்தைப் பார்ப்பதால், தாயாருக்கு இருந்து வந்த மருந்து மாத்திரைச் செலவுகள் இனி படிப்படியாகக் குறையும். அவர் வழிச் சொத்து கைக்கு வரும். சிலர் பழைய சொத்தை விற்றுவிட்டுப் புதிதாகச் சொத்து வாங்குவீர்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உடற்சோர்வு, வீண் அலைச்சல், டென்ஷன் விலகும்.

குரு பகவான் 12ஆம் இடத்தைப் பார்ப்பதால், மறைமுகப் பணவரவு இருக்கும். அரசு காரியங்களில் அலட்சியமாக இருக்காதீர்கள். திடீர்ப்பயணங்கள் கூடி வரும். அதன் மூலம் ஆதாயமும் உண்டு. அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

**உங்களின் செல்வாக்கு கூடும். உங்களின் திறமையால் சாதித்துக் காட்டுவீர்கள். உங்களின் திறமைக்கு அங்கீகாரம்**

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் ராசிநாதனான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் உங்களின் தனித்திறமை வெளிப்படும். புதிய கோணத்தில் பிரச்சினைகளைக் கையாண்டு தீர்வு காண்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும்.

தன தைரியாதிபதியுமான சனிபகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். இழந்த தொகை கைக்கு வரும். அடகில் இருந்த நகைகளை மீட்பீர்கள். சொந்த ஊரில் மதிப்புக்கூடும். அலுவலக ரீதியாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரத்தை பெரிய அளவில் விரிவுபடுத்துவீர்.

பாதக ஜீவனாதிபதியுமான புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல் 31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குருபகவான் பயணம் செய்வதால் வீண் செலவுகள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பணம் கொடுத்து ஏமாறாதீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை கூடும். அம்மாவின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. உடன் பிறந்தவர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். பூர்வீக சொத்து வழக்கில் அனைவரையும் அரவணைத்துச் செல்வது நல்லது. பேச்சில் கவனம் காக்கவும்.

கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வதால் தடைபட்டுக் கொண்டிருந்த வேலைகள் உடனே முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் அதிகரிக்கும். திடீர்ப் பயணங்கள் வரக்கூடும். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். கர்ப்பிணிப் பெண்கள் அதிக பாரம் சுமக்கவேண்டாம். வீட்டில் முதியவர்களுக்கு மரியாதை கொடுக்கவும்.

**வியாபாரம், உத்தியோகம்:**
வியாபாரத்தில் திடீர் இலாபத்தால் திக்குமுக்காடுவீர்கள். நவீன விளம்பர யுக்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களை அதிகப்படுத்துவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை ஏற்படும். உத்தியோகத்தில், உங்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். கலைஞர்கள் உங்களின் திறமையால்சாதித்துக்காட்டுவீர்கள். இந்தக்குருப்பெயர்ச்சி சிந்தித்து செயற்பட்டு சாதிக்கும் காலமாக அமையும்.

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும், நெய்தல் முன்பள்ளிச் சிறுவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மயிலிட்டி உப அலுவலகப் பொறுப்பதிகாரி நாகேந்திரன் விஜேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக, வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமாரன் சிவானந்தனும், கௌரவ விருந்தினராக மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை அதிபர் சிவசக்திவேல் சிவறதீஸும் கலந்து கொள்வர். (க-66)

## எழுதுமட்டுவாழில் பெண்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

'வளமான நாடு அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில், பெண்களாகிய நாம் ஒரே மூச்சுடன் செயற்படுவோம் எனும் எண்ணக்கருவில், பெண்கள் சந்திப்பு எழுதுமட்டுவாழில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக கொண்டு வரப்பட்ட விசேட நிவாரணம், கடன் வசதி, மற்றும் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்லும் பெண்களின் பிள்ளைகளைப் பாதுகாக்க கொண்டு வரப்பட்ட திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. தொடர்ந்து பெண்களுக்கான பயிற்சி நிலையமும் திறக்கப்பட்டது.

நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (க-113)

## யானைகளின் வழித்தடங்களை விடுவிக்கும் திட்டம் அறிவிப்பு!



கொழும்பு, ஜூன் 10

நீண்டகாலமாக நிலவிவரும் மனித-யானை மோதலுக்கு நிலையான தீர்வை வழங்கும் நோக்கில், யானைகளின் தடையற்ற நடமாட்டத்துக்காக வெட்டஹிரகந்த, ஹடபனகல மற்றும் கொஹோலங்கல ஆகிய மூன்று முக்கியமான யானை வழித்தடங்களை விடுவிக்கும் தேசிய திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிகா படபெண்டி மற்றும் பிரதி அமைச்சர் அந்தன் ஜெயகோடி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக முறையற்ற அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நில ஒதுக்கீடுகள் காரணமாக யானைகளின் பாரம்பரிய இடம்பெயர்வுப் பாதைகள் பாதிக்கப்பட்டன. இந்த நிலங்களை வனவிலங்குகளுக்காக மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதுடன், யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுக்க வனவிலங்குக் காப்பகங்களுக்குள் "யானைகளுக்கான உணவு மண்டலங்கள்" உருவாக்கப்படவுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

BCAS INTERNATIONAL UNIVERSITY PLACEMENTS
UniWorld

# YOUR GLOBAL EDUCATION JOURNEY STARTS HERE

Explore. Learn. Grow. Succeed.

UK · CANADA · AUSTRALIA · FRANCE · GERMANY

- Meet university representatives
- Exclusive scholarships
- FREE visa guidance
- Pathway programs
- Student loans and easy payment plans
- IELTS guidance

CALL TO REGISTER 077 769 8062

MEET UNIVERSITIES | EXPLORE PROGRAMS | APPLY ON THE SPOT

13 JUNE 2026 | 09 AM - 4 PM | JETWING JAFFNA, 37, Mahatma Gandhi Road, Jaffna

FREE ENTRY

## குருபூசை

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை வியாழக்கிழமை, நல்லூரில் அமைந்துள்ளசுவாமிகளின் நி னைவாலயத்தில் நடைபெறும். அன்று காலை 9 மணிக்கு அபிஷேகம், திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் இசைக்கப்படும். தொடர்ந்து, முற்பகல் 11 மணிக்கு 'செல்வக்குருநாதன்' எனும் தலைப்பில் ஓய்வுநிலை அதிபர் நா.சிவசிதம்பரம் உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

குறிப்பு: கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

தொடர்பு:077 386 6250

(CS 61268) J-1

## பெயர் மாற்றம்

சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட கிருபாரத்தினம் துரைரத்தினம் என்ற எனது முதற் பெயரை கிருபாரத்தினம் துவாரகன் என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கிருபாரத்தினம் துவாரகன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

கிருபாரத்தினம் துவாரகன்

(CS61617) GD

## மூன்று மாடி வீடு வாடகைக்கு உண்டு

யாழ் மருத்துவ பீடத்திற்கு (திருநெல்வேலி) முன்பாக 50m தூரத்தில் மூன்று மாடி வீடு வாடகைக்கு விடப்படும். அலுவலக வேலைக்கும், மாணவர் விடுதியாகவும் பாவனைக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:
076 480 6874, Whatsapp - 0047 9003 8450

(CS 61618) N-1



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே, கிளிநொச்சியில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான நீச்சல் போட்டியில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள், இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (க)

## வவுனியா வடக்கு பிரதேசசபை - நெடுங்கேணி.
## வரலாற்று சிறப்பு மிக்க ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான அறிவித்தல்.

புதுார் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 2026.06.15ம் திகதி இடம் பெறவுள்ளது. குறித்த பொங்கல் விழாவின்போது பக்த அடியார்கள் மற்றும் வர்த்தகர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பின்வருமாறு.

1. உணவுகளை கையாளுகின்ற வர்த்தகர்கள் மருத்துவ பரிசோதனைச் சான்றிதழினை வைத்திருப்பது கட்டாயமானதாகும்.
2. உணவுப் பொருட்களை கையாளுகின்ற சகல வர்த்தக நிலையங்களும் பிரதேசசபையின் அனுமதியினை பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும்.
3. ஆலயத்திற்கு வருகை தருகின்ற அனைத்து பக்த அடியார்களுக்குமான குடிநீர் வசதி, மலசலகூட வசதி, வீதி ஒழுங்கமைப்பு, வாகன தரிப்பிட வசதி என்பன பிரதேசசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
4. தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டுள்ள ஆடம்பரப் பொருட்களுக்கு எமது சபையினால் பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது குறிப்பாக (முச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்டுள்ள Audio players, Speakers, தலைக்கவசம் போன்றவை)
5. வாகனங்களில் பாதுகாப்பற்ற வகையில் பொருத்தப்பட்டுள்ள பற்றரிகள் களவு போகாத வகையில் அவற்றை பாதுகாப்பதற்கு ஏதுவான வழிவகைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
6. பக்த அடியார்கள் தமது பெறுமதி மிக்க பொருட்கள். ஆபரணங்கள் என்பவற்றை களவு போகாத வகையில் பாதுகாப்பதற்கு ஏற்ற வழிமுறைகளை பின்பற்றவும்.
7. ஆலய வளாகம் புனிதமானது என்பதனால் குப்பைகளை போடுவதற்கு குப்பைத் தொட்டிகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வவுனியா வடக்கு பிரதேசசபையின் உற்சவகால பணிமனையானது 2026.06.13ம் திகதி முதல் இயங்கும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக அறிய கீழ்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர் - 0742433682
செயலாளர் - 0773535918
உத்தியோகத்தர் - 0779793963/ 0762335513

**தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை,**
**நெடுங்கேணி.**

(CR/47646) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதன் பொய்கை

10.06.2026
புதன்கிழமை

ஒருவனையும்
நம்பாதவனை
மற்றவர்கள்
எதற்காகவும்
நம்பப் போவதில்லை.

-வில்கி-



# தீப்பந்தம்:

## எரியும் நினைவுகளை சுமந்து நிற்கும் படைப்பு!

கோ.ருஷாங்கன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கைலாசபதி கலையரங்கம், கலை இலக்கியப் பயணங்களின் ஆழமான தடங்களைப் பதிவுசெய்த ஒரு உன்னதக்களம். ஒரு காலத்தில், சமகால அரசியல் மற்றும் சமூகக் கலாசாரப் பிரச்சினைகளைக் குடும்பப் பின்னணியோடு இணைத்து மேடையேறிய குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'அன்னை இட்ட தீ' நாடகம், இதே அரங்கில் அரங்கு நிறைந்த பார்வையாளர்களோடு புதியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. அன்று நாடக வடிவில் மூட்டப்பட்ட அந்தத் தீ, இன்று 'தீப்பந்தம்' என்ற பெயரில் ஈழத்துத் திரைப்படமாக உருவெடுத்து, அதே கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் காட்சிப்படுத்தப்பட்டது. ராஜ் சிவராஜ் மற்றும் மதீசன் ஆகியோரின் இணை முயற்சியில் உருவான இத்திரைப்படத்தை, முன்னதாகத் தவறவிட்டிருந்த எனக்கு, மதீசனிடமிருந்து வந்த எதிர்பாராத அழைப்பு ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது.

ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி தலைமையில், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பிரதீபராஜாவின் பிரதான உரையுடன், அரங்கு நிறைந்த மாணவர்களின் பங்கேற்போடு காட்சிகள் விரிந்தன. ஈழத்தமிழர் வரலாற்றின் இரு முக்கியமான திருப்புமுனைகளான 'கல்வித் தரப்படுத்தல் சட்டம்' மற்றும் 'யாழ். பொது நூலக எரிப்பு' ஆகிய வரலாற்று வடுக்களை மையமாகக் கொண்டு இத் திரைக்கதை பின்னப்பட்டிருந்தது. தரப்படுத்தல் சட்டத்தினால் 4 'ஏ' சித்திகளைப் பெற்றும் பொறியியல்பீட அனுமதி கிடைக்காத விரக்தியில், கல்வியைக் கைவிட்டு நூலகராக மாறும் சிவகுமரன் என்ற முதியவரின் பாத்திரத்திலிருந்து கதை முன்னகர்கிறது. இப்பாத்திரத்தில் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசானும் செந்தமிழ்ச் சொல்லருவி என்று போற்றப்படுபவருமான சிவகுமார் வாழ்ந்து காட்டியுள்ளார். விபரிப்பிற்குரிய இளவயதுக் குமரனின் முன்கதையை, நூலக எரிப்பின் கோரப் பின்னணியோடு மிக அழகாகத் திரைக்கதை இணைத்துள்ளது.



வரலாற்றில் கல்வித் தரப்படுத்தல் சட்டம் ஏற்படுத்திய தாக்கம் ஆழமானது. எனினும், அது பிற்காலத்தில் பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு, குறிப்பாக வடக்கு, கிழக்கின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய ஏழு மாவட்டங்களுக்கும் மலையக மாணவர்களுக்கும் சாதகமாக அமைந்தது என்ற மாற்றுப்பார்வையும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆயினும், இத்திரைப்படம் ஆரம்பகாலப் பாதிப்பைப் பேசுவதோடு நின்றுவிடாமல், ஈழத்தமிழர் நெஞ்சில் ஆறா வடுவாக இருக்கும் யாழ். நூலக எரிப்பையே முதன்மைக் கருப்பொருளாகக் கொண்டு பயணிக்கிறது. சமகாலச் சந்ததியினர் பலர் முழுமையாக அறிந்திருக்காத இந்த வரலாற்றுப் பின்னணிகளை, அடுத்த தலைமுறைக்குக் கடத்தவேண்டும் என்ற அவசியத்தை ராஜ் சிவராஜ் மற்றும் மதீசன் குழுவினர் தத்ரூபமாகத் திரைமொழியில் வடித்தெடுத்துள்ளனர்.

இப்படத்தின் பெரும்பலம், அதன் காத்திரமான பேசுபொருளை எவ்வித அலுப்புமின்றி, பார்வையாளர்களைக் கவரும் வகையில் நகர்த்திய விதம் தான். நான்கு பல்கலைக்கழக மாணவர்களின் தற்போதைய கல்விக்கால வாழ்க்கையினூடாகச் சுவாரஷ்யமாக ஆரம்பிக்கும் கதை, முற்கதை மீட்டலின் போது (Flashback) அழகானதொரு காதல் கதையாகவும், பள்ளிப்பருவ நினைவுகளாகவும் விரிந்து இளையவர்களை எளிதில் ஈர்த்துவிடுகிறது. முதியவர் சிவகுமரனின் ஆழமான பாத்திர வார்ப்பிற்கு இணையாக, அவரது வீட்டில் தங்கியிருக்கும் மாணவர்களின் துடிப்பான நடிப்பும், இளவயதுச் சிவகுமரனின் நண்பனாக வரும் ஈழ சினிமாச் செயற்பாட்டாளர் பிச்சுமணியின் கலகலப்பான நடிப்பும் திரையை உயிர்ப்பிக்கின்றன.

யாழ். நூலக எரிப்பினால் சாம்பராகிப்போன தொன்மையான ஏட்டுச்சுவடிகளை, சிவகுமரன் தன் தந்தையிடம் கற்ற சுருள்கமரா நுட்பத்தின் மூலம் ஆவணப்படுத்த முயல்வதும், அதற்கு ரவி (மதிசுதா) என்ற கதாபாத்திரம் துணைநிற்பதும் கதையின் திருப்புமுனைகள். கண்ணுக்குத் தெரியாத பல அச்சுறுத்தல்களால் அந்த முயற்சிகள் [illegible] ஆழ்விலும், [illegible]ாக சிவகுமரன் வீட்டில் வளரும் 'புகழ்' என்பவன், தன் தந்தையின் முதுசொமான ரங்குப்பெட்டிக்குள் இருக்கும் அந்தச் சுருள் சுவடிகளைக் கண்டுபிடித்து ஆவணப்படுத்துவதாகக் கதை நகர்கிறது. ஈழப்போராட்டத்தின் ஆரம்பகாலப் புள்ளி என்று வர்ணிக்கப்படும் தியாகி சிவகுமாரின் நினைவுதினத்தில், தற்செயலாக இந்தத் திரைப்படம் யாழ். பல்கலைக்கழகத்தில் திரையிடப்பட்டதன் அரசியல் பொருத்தப்பாட்டை, அங்கு உரையாற்றிய விரிவுரையாளர்களான இளம்பிறையன், உதயகுமார் மற்றும் போதனா மருத்துவமனை மருத்துவர் ஆகியோர் சுட்டிக்காட்டினர். இத்தகைய 'நுண் அரசியலை' மக்கள் மத்தியில் கொண்டுசேர்ப்பதே தங்களின் நோக்கம் என்பதை மதீசனும் தன் உரையில் உறுதிப்படுத்தினார்.

சினிமா, ஊடகம், நாடகம் ஆகிய கலைகளில் 'என்ன சொல்கிறோம் என்பதைவிட, அதை எப்படிச் சொல்கிறோம்' என்ற கோட்பாடு மிக முக்கியமானது. காட்சிகளைத் தொகுக்கும் விதியின் மூலம் செய்தியின் தன்மையையே மாற்றிவிட முடியும் என்பதை நாம் அறிவோம். இத்தகைய நவீனத் தொழில்நுட்பக் கூறுகளைக் கையாள்வதில் மதீசன்-ராஜ் சிவராஜ் கூட்டணி பெரும் திறமை பெற்று விளங்குவதைக் காணமுடிகிறது. இவர்களது முந்தைய படைப்பான 'புத்தி கெட்ட மனிதர்' திரைப்படம் யாழ் .பல்கலைக்கழகத்தின் 'பகிடிவதை' என்ற ஆழமான பிரச்சினையை நகைச்சுவையோடு எப்படிக் கடத்தியதோ, அதேபோலவே 'தீப்பந்தம்' திரைப்படமும் தரப்படுத்தல், நூலக எரிப்பு போன்ற வரலாற்றுப் பெருஞ்சுமைகளை அதன் காத்திரத்தன்மை குறையாமல், அதேநேரம் காதல், நகைச்சுவை, சுவாரஷ்யம் குறையாமல் காட்சிப்படுத்தியுள்ளது.

சமீபத்தில் இந்திய அமைதி காக்கும் படைக்காலத்து நெருக்கடிகளைப் பேசி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய சோமீதரனின் 'நீளிரா' திரைப்படத்தைப் போல, அதற்கு முன்னரே வெளியான இந்தத் 'தீப்பந்தம்' திரைப்படமும் ஈழச் சினிமா என்று நாம் உலக அரங்கில் பெருமிதத்தோடு நிமிர்ந்து நிற்கக்கூடிய ஒரு காத்திரமான படைப்பாகும்.

இருப்பினும், இத்திரைப்படம் வெறும் வரலாற்றுப் பதிவை மட்டும் கடத்தவில்லை. நாடகமும் அரங்கியலும், ஊடகக் கற்கைகளும் பயிலும் மாணவர்கள், தங்களது பட்டப் படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளாக வீதிகளில் நிற்கத் தேவையில்லை; அவர்களுக்குப் பெரும் வருமானத்தையும் கௌரவத்தையும் தரக்கூடிய ஒரு சுய தொழிற்றுறையாகச் 'சினிமாத்துறை' காத்திருக்கிறது என்ற மிக முக்கியமான செய்தியையே, ராஜ் சிவராஜ்-மதீசன் கூட்டணி இத்தீப்பந்தத்தின் வழியே எமது இளம் கலைத்துறை மாணவர்களுக்குப் பிரதானமாக உணர்த்திச் சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும் பகுதி – 07

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்


முதலில், பழையமுறைச் செயற்கை நுண்ணறிவு (Good Old Fashioned AI (GOFAI)) மற்றும் பொதுச் செயற்கை நுண்ணறிவு (Artificial General Intelligence (AGI)) ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டைப் பரிசீலிப்போம். செயற்கை நுண்ணறிவின் ஆரம்பகால வரலாற்றின் பெரும் பகுதியில், ஆய்வாளர்கள் வெளிப்படையான விதிமுறைகள், குறியீட்டு ரீதியான காண்பியங்கள் (symbolic representations), தர்க்கம், மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அறிவுத் தளங்கள் (knowledge bases) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அணுகுமுறைகளில் கவனம் செலுத்தினர். இவ்வாறான அமைப்புகளே இன்று பழையமுறைச் செயற்கை நுண்ணறிவு (GOFAI) என அழைக்கப்படுகின்றன. Expert systems, logical reasoning systems, மற்றும் ஆரம்பகால செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகள் பலவும் இந்தவகையைச் சேர்ந்தவையாகும். இவ்வமைப்புகள் குறிப்பிட்ட சில துறைகளில் மிகவும் திறமையாகச் செயற்பட்டாலும், ஒரு துறையில் கற்றுக்கொண்ட அறிவை வேறொரு துறைக்கு மாற்றிப் பயன்படுத்தும் திறன் அவற்றுக்கு இல்லை. இதற்கு மாறாக, பொதுச் செயற்கை நுண்ணறிவு (AGI) என்பது பல்வேறு துறைகளில் கற்றுக்கொள்ளவும், பகுத்தறியவும், இசைவாக்கம் அடையவும், புதிய சூழல்களுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொள்ளவும் கூடிய ஒரு பொதுவான நுண்ணறிவை உருவாக்கும் நீண்ட கால இலக்கைக் குறிக்கிறது. எனவே AGI என்பது வெறுமனே அதிக சக்திவாய்ந்த AI அல்ல; மாறாக, மனிதர்களின் நுண்ணறிவைப் போன்ற ஒரு பரந்துபட்ட நுண்ணறிவு வடிவமாகக் கருதப்படுகிறது.

சமீபத்திய காலங்களில் உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவு (Generative AI) அமைப்புகளின் வெற்றி, பொதுச் செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆர்வத்தை மீண்டும் அதிகரித்துள்ளது. ChatGPT, Claude, Gemini, Midjourney, DALL-E போன்ற அமைப்புகள் உரை, படம், கணனி நிரல் (code), மற்றும் பிற உள்ளடக்கங்களை உருவாக்கக்கூடிய திறனை வெளிப்படுத்தியுள்ளன. இவ்வமைப்புகள் பல்வேறு பணிகளைச் செய்யக்கூடியதாகத் தோன்றினாலும், அவை இன்னும் ஒடுங்கிய செயற்கை நுண்ணறிவு (narrow AI) வகைக்குள் தான் வருகின்றன. ஏனெனில், இவை மாபெரும் தரவமைப்புகளில் இருந்து கற்றுக்கொண்ட கோலங்களின் (patterns) அடிப்படையில் செயற்படுகின்றன. தன்னிச்சையான நோக்கங்களை உருவாக்குதல், பரந்துபட்ட புரிதல், பல்வேறு துறைகளுக்கிடையேயான அறிவுப் பரிமாற்றம், அல்லது மனிதர்களைப் போன்ற சுயாதீனக் காரணகாரியப் பகுத்தறிவு ஆகிய திறன்கள் இவற்றிடம் இல்லை. ஆகவே, உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவுக்கும் பொதுச் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையேயான வேறுபாடு, இன்றைய AI ஆராய்ச்சியின் மிக முக்கியமான விவாதங்களில் ஒன்றாக உள்ளது.

செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி சமீப காலங்களில் அறிவியலின் வளர்ச்சியுடனும் நெருங்கிய தொடர்பைப் பெற்றுள்ளது. இதற்கு முக்கியமான எடுத்துக்காட்டாக 2024ஆம் ஆண்டின் நோபல் பரிசுகளை எடுத்துக்கொள்ளலாம். இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நரம்புக் கல வலையமைப்புகளின் (artificial neural networks) அடிப்படைக் கருத்துகளை உருவாக்கிய முன்னோடிகள் பௌதிகவியலுக்கான நோபல் பரிசால் கௌரவிக்கப்பட்டனர். அதேபோல், AlphaFold போன்ற AI அமைப்புகளின் மூலம் புரதங்களின் (proteins) முப்பரிமாண வடிவத்தை மிகத் துல்லியமாக முற்கூற உதவிய ஆராய்ச்சிகள் இரசாயனவியலுக்கான நோபல் பரிசைப் பெற்றன. இந்த நிகழ்வுகள் ஒரு முக்கியமான மாற்றத்தைக் காட்டுகின்றன. செயற்கை நுண்ணறிவு இனி அறிவியலாளர்கள் பயன்படுத்தும் ஒரு கருவி மட்டுமல்ல; மாறாக, அறிவியல் கண்டுபிடிப்புகளில் நேரடியாகப் பங்களிக்கக்கூடிய ஒரு அறிவார்ந்த தொழில்நுட்பமாக இது மாறிவருகிறது.

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்டு பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி, தொற்றுநோயியல் ஆராய்ச்சிக் கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப்பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்

## பொதுச் செயற்கை நுண்ணறிவை நோக்கி




இருப்பினும், தற்போதைய AI அமைப்புகளுக்கும் பொதுச் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையில் இன்னும் குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது. உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் கட்டுரைகள் எழுதவும், கணனி நிரல்களை உருவாக்கவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், படைப்பாற்றல்மிக்க உள்ளடக்கங்களை உருவாக்கவும் செய்கின்றன. ஆனால் அவை உருவாக்கும் விடயங்களை அவை உண்மையில் 'புரிந்துகொள்கின்றன' என்று கூறமுடியாது. அவற்றின் தொழிற்பாடு பெரும்பாலும் புள்ளிவிபரவியல் ரீதியான தொடர்புகள் மற்றும் கோலங்களை அடிப்படையாகக் கொண்டது. மனிதர்கள் போல பொது அறிவைப் (commonsense knowledge) பயன்படுத்துதல், முற்றிலும் புதிய சூழல்களில் இசைவாக்கம் அடைதல், நீண்டகாலத் திட்டமிடல், மற்றும் பல்வேறு அனுபவங்களை ஒன்றிணைத்துக் காரணகாரியங்களைப் பகுத்தறிதல் போன்ற திறன்கள் இன்னும் முழுமையாகச் செயற்கை நுண்ணறிவுக்கு உருவாகவில்லை. இதுவே தற்போதைய AI மற்றும் AGI இடையேயான பிரதான வேறுபாடாகக் கருதப்படுகிறது.

பொதுச் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி பல புதிய நெறிமுறைச் சிக்கல்களையும் எழுப்புகிறது. பழையமுறைச் செயற்கை நுண்ணறிவு (GOFAI) அமைப்புகள் பொதுவாக வெளிப்படையான விதிமுறைகளின் அடிப்படையில் செயற்பட்டதால், அவற்றின் முடிவுகளை விளக்குவது ஒப்பீட்டளவில் எளிதாக இருந்தது. ஆனால் ஆழக்கற்றல் மற்றும் நவீன இயந்திரக் கற்றல் அடிப்படையிலான அமைப்புகள் மிகவும் சிக்கலான உள்வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதால், அவற்றின் முடிவுகளை விளக்குவது கடினமாகிறது. இதனால் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், மற்றும் விளங்கப்படுத்தக்கூடிய செயற்கை நுண்ணறிவு (explainable AI) போன்ற கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதேபோல், தரவமைப்புகளில் உள்ள கோடல்கள் (biases) சமூக அநீதிகளை வலுப்படுத்தக்கூடும் என்பதால், அவற்றைக் கண்டறிந்து சரிசெய்வதும் அவசியமாகிறது.

மேலும், பொதுச் செயற்கை நுண்ணறிவு சமுதாயத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றியும் பரவலான விவாதங்கள் நடைபெறுகின்றன. தற்போதைய AI ஏற்கனவே பல தகவல் சார்ந்த பணிகளைத் தானியங்கியாக்கத் தொடங்கியுள்ளது. AGI உருவாகுமானால், கல்வி, மருத்துவம், அறிவியல் ஆராய்ச்சி, நிர்வாகம், பொருளாதாரம், மற்றும் தொழிலாளர் சந்தை ஆகிய துறைகளில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும்.


குறிப்பாக வழக்கமான தகவல் செயலாக்கப் பணிகள் அதிக அளவில் தானியங்கியாகலாம். அதே வேளை, மனிதர்களின் படைப்பாற்றல், சமூகத் தொடர்பாடல், மற்றும் மதிப்பீட்டுத் திறன்கள் ஆகியவை தொடர்ந்து தேவைப்படக்கூடும்.

பொதுச் செயற்கை நுண்ணறிவைப் பற்றி நிகழும் மிகவும் சர்ச்சைக்குரிய விவாதங்கள் அதன் நீண்ட கால அபாயங்களைப் பற்றியவையாகும்.

மறுபக்கம் பார்க்கவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செம்மணியிலிருந்து ஒரு பச்சிளம் ஆத்மாவின் அலறல்......!



அதிகாலைப்பொழுது.
அனைவரும் பொது இடத்திலே
ஒன்றுதிரட்டப்படுகிறார்கள்
ஏதும் அறியா நானும்
அப்பா அம்மா கூட
அங்கே நிக்கிறேன்
ஏதும் அறியாதவனாய்.

அனைவர் முகத்திலும்
பயம் கலந்த பீதி
நான் ஏதும் அறியாத
அப்பாவியாய்
இளங்கன்று பயமறியா?
அதே எண்ணத்துடன்
பதட்டமான உறவுகளின் மத்தியில்
சங்கடமின்றி நிற்கின்றேன்.

தலையாட்டி வரப்போகுதாம்
என்று அங்குள்ளவர்கள் ஒரே கதை
அதைப் பார்க்க ஆவலுடன் நான்
கறுப்பு நிற வாகனம் வந்ததும்
நிசப்த அமைதி
தலையாட்டி பொம்மையைப் பார்க்க
நானோ ஆவலுடன்

முகத்திலே முகமூடியுடன்
வந்த ஒரு உருவம்
எனக்கு முதலில் சிரிப்பு
பின்பு தான் தெரிந்தது
அது என் இனத்தைக்
காட்டிக்கொடுக்கவும்
கூட்டிக்கொடுக்கவும்–வந்த
ஒரு துரோகி என்று
இத்தனை அவலங்களுக்கும்–அந்த
தலையாட்டியும் காரணமென்று

தலையாட்டி ஒவ்வொருவராய்
நோட்டமிட்டது
பலர் சிக்கினர்
சிலர் தப்பினர்
அந்தத் துரோகி வலையிலே..
என் அப்பாவும் ஒருவராய்

சிக்கிய பலர் பெரிய
கவச வாகனங்களிலே
அள்ளிச் செல்லப்பட்டனர்
ஏதும் அறியா நானும்
அதில் அகப்பட்டுக்கொண்டேன்

கவச வாகனம்
சில மைல் தூரம் பயணமாகியது
அதுதான் எங்கள் இறுதிப்பயணம் என
இதயம் கூட சொல்லவில்லை எனக்கு

ஓரிடத்திலே கவச வாகனம்
நின்றதும் அனைவரும்
மந்தைகளை விட
கேவலமாக இறக்கப்பட்டோம்
அருகிலே நின்ற ஆமி மாமா
எங்கள் அனைவரையும்
இமைகள் நொடிக்காமல் பார்த்தான்
பின்பு தான் தெரிந்தது
அவனும் ஒரு மிருகம் என்று

என்னுடன் வந்தவர்களின்
ஆடைகள் துகிலப்பட்டு
சீரழிக்கப்பட்ட ஏராளமான
தாய்க்குலங்களும்
சித்திரவதை செய்யப்பட்ட
ஆண்குலங்களும்
சத்தமிட்டுக் கதறுகின்றனர்
யாருக்கும் அது கேட்கவில்லை
பாஞ்சாலிக்குத் துகில் கொடுத்த
கண்ணனுக்கும் எங்கள்
கதறல் கேட்கவில்லை

இப்பதான் புரியுது அது
செம்மணி சிந்துபாத்தி என்று

வானிலே வட்டமிடும் கழுகுக் கூட்டங்களும்
செம்மணியின் அவலம் கண்டு
கண்ணீர் சிந்தின
பிணம் தின்னும் கழுகுகளுக்கும்
மனிதநேயப் பார்வையா?..........
எங்கள் மீது
மனிதனாகப் பிறந்த உனக்கு
பிணம் தின்னும் எண்ணமா?..........
எங்கள் மீது

சீரழிக்கப்பட்ட தாய்க்குலங்களும்
சிதைக்கப்பட்ட ஆணினமும்
தாக்கப்பட்டுக்கொண்டே
இருந்தார்கள் அந்த
மதிகெட்ட பாவிகள் முன்னே
ஏதும் அறியா எனக்கும்
பின்புறத்திலே பலமாய் ஓரடி விழுந்தது.
மண்மீது முத்தமிட்டு சாய்ந்தேன்
அக்கணமே!

காலதேவனும்
கண்ணீர் வடித்திருப்பான்
என்னுடைய துடிப்புக்கண்டு

நீதி தேவதையும்
கண்மூடி விட்டாள்
எனக்கு நேர்ந்த அநீதி கண்டு

பூமாதேவி மட்டுமே
என்னுடலை இன்றுவரை
தாங்கி நின்றாள்

அதிகாரிகள் உரத்த தொனியிலே
மூவருக்குக் கட்டளை – ஆம்
இதுகளை அங்கே
புதை என்று
மண்வெட்டியால் குழிகள்
தோண்டப்படுகின்றது
இறந்த உயிர்கள் சிலவும்
குற்றுயிர்கள் பலவும்
உயிருடன் புதைக்கப்படுகின்ற
அவலம்..
மேகக்கூட்டங்களும்
தமது பயணத்தை நிறுத்தி
ஒரு நிமிடம்
மௌன அஞ்சலி செலுத்துகின்றன.

தலையாட்டியின் துரோகம்
இப்போதான் எனக்குப் புரிந்தது
ஏதும் அறியா நானும்
சங்கடங்களுக்குள் அகப்படுவேன்
என்று தமிழினத்தை வேரறுக்க வந்த
கயவன் அவன் தானோ

புதைகுழிக்குள்ளும்
தாயவள் என்னைக் காப்பாற்ற
பெரும் போராட்டம்
நானோ வெளியே வரமுடியாத
திண்டாட்டம்
அப்பாவின் உயிர் அடங்கி விட்டது போல
நிசப்த அமைதி
அம்மா என்னை இறுகக்
கட்டி அணைக்கிறாள்
என்மீது மண்
துகள்கள் வேகமாக விழுந்து
குழி மூடிக்கொள்கின்றது..

சரியாய் தெரியவில்லை
பதினைஞ்சு தொடக்கம் இருபது
ஆண்டுகளுக்குள் மீண்டும்
எங்கள் குழி தோண்டப்படுகின்றது.
தகன மின் மயானம்
அமைக்க குழி தோண்டியதாகக்
கருதுகிறேன்.

உள்ளூர் வாசிகளும்
அரசியல்வாதிகளும்
சர்வதேச அமைப்புகளும்
ஐ.நா. மனித உரிமை ஆணையாளரும்
புலம்பெயர் உறவுகளும்
எங்களுக்காக நீதி வேண்டிப்
போராடுவது
மனதுக்கு ரம்மியமாகவே
இருக்கின்றது

வான்வெளியிலே
அறிவியல் ஆராய்ச்சி நடத்தும்
விஞ்ஞானமே.
மண்ணுக்குள்ளும் சிறிது
ஆராய்ச்சி செய்து
எங்கள் கொடுமைகளை
சர்வதேசத்திடம் சமர்ப்பி
அங்கேயாவது – எமக்கு
நீதி கிடைக்கட்டும்

உள்ளூர்வாசிகளே
அரசியல்வாதிகளே
உள்ளகப்பொறிமுறை
எமக்கு வேண்டாம்..?
சர்வதேசப் பொறிமுறை தான்
எமக்குத் தீர்வாகுமென்று
நாம் கருதுகின்றோம்

எங்கள் தூபி மீது
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்
இரு கரங்களாலும்
மலர் தூவி அஞ்சலிக்கும் போது
மண்ணுக்குள்ளே மாண்டுபோன
எங்களுக்கு – நீதி
கிடைக்குமென்று நம்புகின்றோம்.

பல கால ஏக்கங்களுடன்
செம்மணி சிந்துபாத்தியில்
புதைக்கப்பட்டவர்களில்
நானும் ஒரு பாலகன்
இது எனது ஆத்மாவின்
குரல்.?

**ஆக்கம்: ஏ.வி.கர்ஜன்**
**சண்டிலிப்பாய வடக்கு**

# வானமுதமாகத் தித்திக்கும் திருமுறைத் தேனமுதம்

பன்னெடுங்காலமாக செங்கோலோச்சி வரும் சைவத்தமிழிசை மரபு அண்மைய காலங்களில் நைந்து நலிவுற்றுப் போவது ஆன்மிகப் பார்வைப் புலத்தினரின் அவதானிப்பு. இந்தப் பின்புலத்தில் பல்கலை வல்லுநராக இலேசாக தன்னை இனங்காட்டும் கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் 'தெய்வீகத்திருமுறைத் தேனமுதம்' எனும் பஞ்சபுராணங்களும் பயன் தரு பாசுரங்களும் என்ற கருப்பொருளில் உருப்பெற்றுள்ள நூற்தொகுப்பு காலத்துக்கேற்ற சாலச்சிறந்த வரப்பிரசாதமாகும். இராசையா ஸ்ரீதரன், ஆலயங்களிலே பிழை பிழையாக ஓதப்படும் தேவாரங்களைச் செவிமடுத்தும் பொருத்தப்பாடற்ற வகையில் ஓதப்படும் 'அபிராமி அந்தாதி' முதலான இசைவடிவங்களையும் அவதானித்தும் அவரது இதயத்தில் அலை மோதிய மனக்குமுறலே இத்தகையதொரு தெய்வீகத் தேனமுதை வெளியிடத் தூண்டியுள்ளது என்பது தெளிவாகப் புலனாகின்றது.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறை துதிபாட ஒவ்வொரு இந்துவையும் தூண்டும் அவரது இவ்வாக்கமுயற்சி பெரிதும் போற்றப்படவேண்டும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஓதுவார்களாலேயே முறைப்படி பஞ்சபுராணம் ஓதப்படும் அளவிற்கு தேவார இசைவல்லுநர்கள் அருகிவரும் இக்காலகட்டத்தில் பக்திப்பரவசம் பெருகி மனம் உருகி நெஞ்சறிய பக்திச்சுவை சொட்ட பஞ்சபுராணம் பாடும் ஒரு ஆன்மிகத் தமிழுலகை இந்நூல் சிருஷ்டிக்கும் என்பது திண்ணம். அது ஒரு விமர்சகனின் எண்ணம்.


அவரது தேவார திருவாசகத்தெரிவு அவருக்குள்ளே நிழலாடும். ஆளுமையையும் ஆன்மிகத்துறையில் அவருக்கு இருக்கக் கூடிய புலமைத்துவத்தையும் உள்ளார்ந்து வெளிப்படுத்துகின்றது. 'முத்திநெறி அறியாத மூர்க்னோடு முயல்வோனை' என்ற திருவாசகத்தெரிவு இந்துக்களிடம் ஒரு பாரிய ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசைப்படும் அவரது மன உணர்வினை படம்பிடித்துக்காட்டி மெய்ப்பிக்கின்றது.

மானிட வாழ்வில் ஏற்படக்கூடிய பல்வகைத் துன்ப துயரங்களுக்கும் நல்ல தேவார ஆன்மிகத் தீர்வினை வழங்கும் உயரிய எண்ணப்புலத்தில் பொருத்தமாக அவர் தெரிவுசெய்து தொகுத்து வழங்கிய பாடல்கள் வெகுபிரமாதம். தேவார திருவாசகங்களின் ஊடான ஆன்மிகத்துறை எவ்வகையிவ் மனித வாழ்வை மேம்படுத்தும் என்பதனை அவர் தனது பழுத்த கூர்மியமான ஆன்மிக ஈடுபாட்டின் துணையுடன் இறையாசி கிடைக்கப்பெற படிக்கப் படிக்க பக்திச்சுவை நனி சொட்டும் இந்தத் திருமுறைத் தேனமுதத்தினைத் தொகுத்து வெளியிட்டுள்ளமை ஒரு மாபெரும் இறைபணியாகும். இந்நூல் ஒவ்வொரு இந்துவினதும் கைகளிலும் தவழ்ந்து அவர்களின் வாழ்வில் இன்பம் துய்க்கும் என்பதை நிச்சயம் காலம் மெய்ப்பிக்கும்.

**ஆனையூர்க்கவிராயர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மாட்டு வண்டில் சவாரிப் பந்தயம்





# கண்டாவளைத் திடலில் சீறிப் பாய்ந்த காளைகள்!

தமிழர்களின் தொன்மைமிகு பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான மாட்டுவண்டில் சவாரிப்போட்டி கிளிநொச்சி, கண்டாவளை கோணங்குளம் கற்பகப் பிள்ளையார் சவாரித் திடலில் விமரிசையாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றுள்ளது.

மண்ணின் பாரம்பரியத்தையும், வீரத்தையும் பறைசாற்றும் வகையில் அமைந்த நிகழ்வைக் காண்பதற்குப் பெருந்திரளான பொதுமக்கள் சவாரித் திடலில் கூடியிருந்தனர்.

இம்முறை நடைபெற்ற சவாரிப்போட்டியில் வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதந்த 70க்கும் மேற்பட்ட பந்தயக் காளைகள் களமிறக்கப்பட்டன.

ஒன்றுக்கொன்று சளைக்காத வகையில் காளைகளும், அவற்றைச் செலுத்திய வீரர்களும் காட்டிய வேகம் பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் திறமையை வெளிப்படுத்தி, வட்டக்கட்சியைச் சேர்ந்த போட்டியாளர் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டார். அவருக்குப் பரிசாக, புதிதாக வடிவமைக்கப்பட்ட மாட்டுவண்டில் ஒன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

போட்டியில் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுக்கொண்ட வீரர்களுக்கும் பெறுமதிமிக்க பல பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நலிந்துவரும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளைப் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசேர்க்கவும் இவ்வாறான போட்டிகள் பெரும் பங்காற்றுகின்றன. ■

# விடிவு கிடைக்குமா கொத்தாழை வீதிக்கு!

**வாசகர் திருமுகம்**

வரணி, கரம்பைக்குறிச்சியில் (ஜே/342) கிழக்குப் பக்கமாக உள்ள கொத்தாழை வீதி சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக புனரமைப்பின்றிய நிலையில் உள்ளதால் பொதுமக்களும், வாகனச்சாரதிகளும் பாரதூரமான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக மாரிகாலத்தில் சொல்லொணாக் கஷ்டங்களின் மத்தியிலேயே இந்த வீதியூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது. இவ்வீதியின் வடக்குப் பகுதியில் சேவலப்பிட்டி கந்தசாமி ஆலயம், சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி பொதுச்சந்தை என்பன அமைந்துள்ளன. தெற்குப் பகுதி வீதியில் ஆழ்வார்மட ஆலயம், சமுர்த்தி வங்கி பொதுநூலகம், வரணி மத்திய கல்லூரி என்பன அமைந்துள்ள நிலையில் பாடசாலை மாணவர்கள் மாரி காலத்தில் படும் துன்பத்தைப் பார்க்கும் போது நெஞ்சு பதைபதைக்கும்.

சட்டம் சகலருக்கும் சமம் என்பார்கள். அதேபோன்று அபிவிருத்தியிலும் எல்லா இடங்களும் சமம் என்ற கொள்கையே பின்பற்றப்பட வேண்டும். அதிகளவான மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையே சாரும். எனவே பருவ மழை ஆரம்பிக்க முன்னர், குறித்த வீதியைச் சீரமைத்து மாணவர்களினதும், மக்களினதும், சாரதிகளினதும் போக்குவரத்தில் உள்ள இடையூறை இல்லாதொழிக்க நவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

**இப்படிக்கு**
அ. அன்பு
(வரணி)

# செயற்கை....

*(10ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஒடுங்கிய செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் குறிப்பிட்ட பணிகளுக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டிருப்பதால், அவை பொதுவாக மனிதகுலத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுவதில்லை.

ஆனால் AGI மனிதர்களின் அறிவாற்றலை மிஞ்சும் நிலையை அடைந்தால் என்ன நிகழும் என்ற கேள்வி பல ஆய்வாளர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. மனித விழுமியங்களுடன் ஒத்திசைவாகச் (alignment) செயற்படாத ஒரு மிகத் திறமையான அமைப்பு எதிர்பாராத பின்விளைவு களை உருவாக்கக்கூடும் என்ற அச்சமும் உள்ளது. இத்தகைய கருத்துகள் Ex Machina, Blade Runner, The Matrix, மற்றும் I, Robot போன்ற அறிவியல் புனைகதைப் படைப்புகளிலும் பரவலாக ஆராயப்பட்டுள்ளன.


மொத்தத்தில், பழையமுறைச் செயற்கை நுண்ணறிவிலிருந்து உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவை நோக்கிய பயணம், செயற்கை நுண்ணறிவின் வரலாற்றில் ஏற்பட்டுவரும் மிகப் பெரிய மாற்றங்களில் ஒன்றாகும். இருப்பினும், பொதுச் செயற்கை நுண்ணறிவை நோக்கிய பயணம் இன்னும் நிறைவடையவில்லை. தற்போதைய உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் அசாதாரணமான திறன்களைக் காட்டி அறிவியல், தொழில், மற்றும் அன்றாட வாழ்க்கையை மாற்றிவருகின்றன. ஆனால் மனிதர்களைப் போன்ற பரந்துபட்ட, இசைவாக்கம் அடையக்கூடிய மற்றும் பொதுவான நுண்ணறிவை அவை இன்னும் அடையவில்லை. பொதுச் செயற்கை நுண்ணறிவு உண்மையில் உருவாகுமா, அது எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும், மற்றும் மனித சமுதாயத்தில் அது என்ன பங்கு வகிக்க வேண்டும் என்பவை, எதிர்காலச் செயற்கை நுண்ணறிவின் மிக முக்கியமான கேள்விகளாகத் தொடர்கின்றன.


இந்த வருடத்தில் சிட்னிப் பல்கலைக்கழகத்தில் (முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு) நான் கற்பிக்கும் பாடங்களில் ஒன்று Artificial Intelligence and Society: செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்.

இந்தப் பாடமும் இதன் உள்ளடக்கமும் பொதுவாக எமது மக்களுக்கு ஆர்வமான ஒரு விடயமாக இக்காலத்தில் இருக்கலாம் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. ஆகவே ஒவ்வொரு வார விரிவுரைகளையும் சுருக்கமாகத் தமிழில் எழுதலாம் என்று எண்ணினேன். இது இரண்டு மணிநேர விரிவுரையின் சுருக்கம் மட்டுமே. விரும்பியோர் வாசித்துப் பயன்பெறுக.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 10


வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவிகள் சிவகலை கோவர்த்தனி சகோதரிகளின் மகிழ்வின் நிறங்கள் சிறுவர் சித்திரக் கண்காட்சி, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை அதிபர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண அழகியல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.இராஜன், சிறப்பு விருந்தினர்களாக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர் கலந்துகொண்டனர். (க-159)

## சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய 3 உணவகங்களுக்கு சட்டநடவடிக்கை

மன்னார், ஜூன் 10

மன்னார் நகர்ப்பகுதியில், சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய, மூன்று பிரபல உணவகங்கள் மீது, மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால், சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பணிமனைக்குத் தொடர்ச்சியாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து, பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட்டின் அறிவுறுத்தலுக்கு அமைய, குறித்த உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. மூன்று உணவகங்கள் கடுமையான சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது. உணவுகள் தயாரிக்கப்படும் இடங்கள் அசுத்தமாகவும், துர்நாற்றத்துடனும், கழிவுநீர் வெளியேற முறையான வசதிகள் இன்றியும் காணப்பட்டமை, சேகரிக்கப்படும் குப்பைகள் உரிய முறையில் அகற்றப்படாமை, உணவகங்களுக்கு உரிய சுகாதாரச் சான்றிதழ்கள் பெறப்படாமை, பணியாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இல்லாமை, முகக்கவசம் மற்றும் கையுறை அணியாமல் சுகாதாரமற்ற முறையில் உணவுகளைக் கையாண்டமை, கழிவறைகளுக்கு அருகிலேயே உணவு தயாரிப்பு உள்ளிட்ட கடுமையான சுகாதார மீறல்கள் கண்டறியப்பட்டன. அந்த மூன்று உணவகங்களின் உரிமையாளர்கள் மீது சட்டளநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-56,213)



## தேசிய அணிக்கு முதல்முறையாக யாழ்.பாடசாலை மாணவி தெரிவு




யாழ்ப்பாணம், ஜூன் 10

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில், இலங்கை தேசிய அணிக்காக, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் கல்லூரியைச் சேர்ந்த மாணவி லூட்சி றெஜினஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தெற்காசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில், இலங்கை அணியைப் பிரதிநித்துவப்படுத்தி வடக்கு மாகாணத்தில், மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும். மாணவிக்கு தனுஷ் ராஜசோபனா பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற போட்டியில், இந்தியாவுடன் மோதிய இலங்கை அணி, இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (க-26)


### தென்மராட்சியில்

## வர்த்தகக் கண்காட்சியும் தொழிற்சந்தையும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் தென்னருவி வர்த்தகக் கண்காட்சியும் தொழிற்சந்தையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கண்காட்சி வெள்ளிக்கிழமை நிகழ்வு காலை 9 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனது தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். கண்காட்சியில் வலய வர்த்தகப் பிரிவினரால் முயற்சியாண்மை யாளர்களின் காட்சிக் கூடங்களும், வணிக முகாமைத்துவம், கணக்கீடுசார் நிறுவனங்களின் தொழில் வழிகாட்டல் அலகுகளின் கூடங்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, வலய தொழில் வழிகாட்டல் அலகினால் தொழிற்சந்தைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)





## பெருந்திரளானோர் மத்தியில் நடந்த கவுணாவத்தை வேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 10

கீரிமலை கருகம்பனை அந்திரானை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய மரபுவழி வேள்விப் பொங்கல் விழாவில், 350க்கும் மேற்பட்ட ஆடுகள் வெட்டப்பட்டன.

ஆலயத்தின் மரபுவழிப் பொங்கல் கடந்த மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு விளக்கு வைப்புடன் ஆரம்பமானது. எட்டாம் மடை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும். இம்முறை வேள்விப் பொங்கலுக்கு, யாழ்.மாவட்டத்தின் பல் பாகங்களிலிருந்தும், புலம்பெயர் தேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்குபற்றியுள்ளனர். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1ஆம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 21.06.2026 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகமுத்து நவரத்தினம்

(தொழிலதிபர் - நவரத்தினம் தச்சு தொழிலகம்)

**தோற்றம்** 18.01.1950 **மறைவு** 21.06.2025

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை (11.06.2026) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவரத்தினம் தச்சு தொழிலகம்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (இணுவில்)

குடும்பத்தினர்

(cs 61612) (N-1)



'சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம், இலத்திரனியல் கழிவுகளை மறுசுழற்சி செய்வோம்' எனும் தொனிப்பொருளுக் கமைய இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் பெட்டிகள் உலக சுற்றாடல் தினத்தன்று யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் கொமர்ஷியல் வங்கியின்யாழ்ப்பாண முகாமையாளர் ரி. யோகச்சந்திராவால் கையளிக்கப்பட்டது. (ச-இ)

# சிரமதானம்



கிளிநொச்சி,ஜூன் 10

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, பொலிஸார் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினர் இணைந்து ஏ-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து இரணைமடுச் சந்தி வரை சிரமதானத்தை முன்னெடுத் தனர். இதன்போது வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றப்பட்டன. குறித்த சிரமதானப்பணியில் மாவட்டச் செயலர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட் டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் பங்கேற்றனர்.

(க-113)

## மரண அறிவித்தல்

**பிறப்பு** 02 . 01 . 1938



**இறப்பு** 09 . 06 . 2026

### சரவணமுத்து கந்தவேள்

(ஓய்வுபெற்ற லிகிதர்)

சரவணையை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தவேள் அவர்கள் நேற்று (09.06.2026) செவ்வாய்க்கிழமை அன்று திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சிவகாமி அம்மை தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், சண்முகமணி (அவுஸ்திரேலியா) அவர்களின் சகோதரனும், யோகராணி, பாலசுப்பிரமணியம் - பிரேமலா, யோகநாதன், தர்மராணி, காலஞ்சென்ற சக்திவேல் - கமலேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகராஜா - கௌரிதேவி ஆகியோரின் மைத்துனரும், சரவணன் (அவுஸ்திரேலியா) அவர்களின் பெரிய தந்தையும், குருபரன், கிரிதரன், ஜெகதீஸ்வரி, கௌசிகா, மேனகா, சசிவன், தர்மலா ஆகியோரின் மாமனாரும், சக்தீஸ்வரி, தயானி, ஜனோசியா, ஐங்கரன், வசீகரன், ஐஸ்வரியா, அம்சாயினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2026) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

32/14, நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31961)A

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 31ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

**மலர்வு** 21 . 11 . 1945



**உதிர்வு** 11 . 05 . 2026

கடந்த 11.05.2026 அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் திருமதி சண்முகலிங்கம் ஈஸ்வரி


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.06.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குடும்பத்தினர்.
பொற் தொழிலாளர் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
077 800 2724, 077 943 9333

(CS/31960) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கற்பகப்பிள்ளையாரை தரிசிக்கவந்தகடவுளர்கள்

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் பதினொராம் நாள் உற்சவத்தில் பல்வேறு தெய்வங்கள், முனிவர் வேடங்கள் அணிந்து வந்த சிறார்களின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. பிள்ளையாரின் வீதியுலாவின் போது, சிறார்களின் இந்தத் தெய்வீக வேடங்கள் அடங்கிய அணிவகுப்பு பக்தர்களின் மனதை நெகிழவைத்து பரவசப்படுத்தியது. (ச-66)

### மன்னார் நகரசபையால்

# 12 கோடி ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

**மன்னார், ஜூன் 10**

**மன்னார் நகர சபை பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குள், இதுவரை 12 கோடி ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் நகர சபைத் தவிசாளர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபை நிதியில் 7 வட்டாரங்களில் 34 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக 6,25,75, 000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பிரமாண அடிப்படையிலான கொடை நிதி ஒதுக்கீட்டில் 3 ஆம் வட்டாரத்திலும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி சுற்றுலாத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டில், 5 வட்டாரத்திலும், டித்வா புயல் நிதி ஒதுக்கீட்டில் முதலாம், மூன்றாம், ஆறாம், ஏழாம் வட்டாரங்களிலும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள் என.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டில், இரண்டாம் வட்டாரத்திலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதித் திட்டத்தில் இரண்டாம், மூன்றாம் வட்டாரங்களிலும், கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தில் முதலாம், 4ஆம் மற்றும் 6ஆம் வட்டாரங்களிலும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (சு-60)

**வீடு வாடகைக்கு உண்டு**

கச்சேரி நல்லூர் வீதியில்
(கச்சேரிக்கு அண்மையாக)
4 அறைகளுடன் கூடிய
வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 370 1752
(N-1616)

### நடுக்கடலில் கடும் காற்று

# இன்று வருமா சிவகங்கை? 243 பயணிகள் பரிதவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 10

சீரற்ற காலநிலை காரணமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், இன்றைய தினம் சிவகங்கை பயணிகள் கப்பற்சேவை இடம்பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கைக் கடற்பரப்பின் ஆழ்கடல் பகுதியில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இதனால் நாகபட்டினம் துறைமுகப் பகுதியில் சிவப்பு எச்சரிக்கையும் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் செம்மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே இன்றைய தினம் சிவகங்கை பயணிகள் கப்பற் சேவை இடம்பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இன்று காலை நாகபட்டினத்தில் இருந்து 102 பயணிகளும் காங்கேசன்துறையில் இருந்து 141 பயணிகளும் பயணத்தை மேற்கொள்வதற்கு முற்பதிவு செய்துள்ளனர். நேற்று இரவு வரை கப்பல் சேவை இடம்பெறும் என்பதாகவே பயணிகள்கப்பற்சேவையைமுன்னெடுக்கும் நிறுவனத்தினர் கூறியுள்ளனர். (ம-100)

# உடுவிலில் தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 10

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான பிரதேச தொழிற்சந்தை 2026 நிகழ்வு நாளை வியாழக்கி ழமை காலை 9.30 மணி முதல் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் தனியார் துறை வேலைவாய்ப்பு, உயர் கல்விக்கான வழிகாட்டல்கள், தொழில்சார் கற்கை நெறிக்கான வழிகாட்டல், சுயதொழில் முயற்சி ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளன. என வே.குறித்த நிகழ்வில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளைத்தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

## ஐந்தாண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 . 11 . 1946

விண்ணில் 04 . 06 . 2021



அப்பா என்றும் உங்கள் நினைவில்

**அமரர் சிதம்பரன் திருஞானசிவம்**

(உரிமையாளர் - சிதம்பரன் களஞ்சியம், கைதடிச் சந்தி, கைதடி, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)

"அப்பா ஐந்தாண்டுகள்
உடலுருவாக இவ்வுலகிற்கு நீங்கள்
மறைந்தாலும் உயிராக உணர்வாக
என்றும் எங்களுடன் எங்கள் எண்ணம்
செயல் எல்லாவற்றிலும் இன்றும் என்றும்
நின்று வழி நடத்துகின்றீர்கள் - என்றாலும்
எப்போது உடலுயிர் பெற்று உருவாக
மீள்வீர்கள் அப்பா....... அப்பா........ அப்பா.....

இன்று (10.06.2026) புதன்கிழமை கைதடியில் அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் ஐந்தாண்டு நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

"திருத்தணிகை"
கைதடி மத்தி,
கைதடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.61610) (N-1)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## புலிகள்...

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:-
கிளிநொச்சியைச் சேர்ந்த பாடகர் சங்கீத்சன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். உண்மையில் அவர் மீதான கைது நடவடிக்கை சட்டவிரோதமானது. போர் இல்லாத காலத்தில் விடுதலைப் புலிகளையோ அல்லது அதன் தலைவர் பிரபாகரனையோ புகழ்ந்தார் என்பது எவ்வாறு பயங்கரவாதமாகும்? இது வெறும் கருத்து. ஒரு கருத்துக்காக, ஒரு நிலைப்பாட்டுக்காக ஒருவரைக் கைதுசெய்ய முடியாது. இந்தக் கைது நடவடிக்கை, தற்போதைய அரசாங்கத்துக்கு சட்டம் தொடர்பான புரிதல் இல்லை என்பதையும், அரசாங்கத்தின் முதுகெலும்பற்ற தனத்தையுமே காண்பிக்கின்றது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தைஒழிப்போம் என்றுகூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினர் இன்று அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும்வரை அதை நாங்கள் பயன்படுத்த மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கக்கூட அவர்களால் இயலவில்லை.
போர் முடிந்து 17 வருடங்கள் கடந்துவிட்டன. இன்றும்கூட வடக்கு கிழக்கு மாகாண மக்களிடம் சென்று கேட்டால், விடுதலைப்புலிகள் திரும்ப வரவேண்டும் என்றுதான் கூறுவார்கள். அவ்வாறு மக்கள் கூறுவதால்தான் உங்களின் மீன்பிடி அமைச்சர் திலீபனின் நினைவு தினத்துக்குச் சென்று பங்கேற்று சொந்தம் கொண்டாட முனைந்தார். உங்களுடைய அரசியல் தோல்வி, உங்களுடைய நோக்கங்கள் தோல்வி. அதை மூடிமறைப்பதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் பயன்படுத்த அரசாங்கம் முற்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமது தோல்வியை மறைக்கலாம் என்று அரசாங்கம் நினைத்தால் அதைவிட பகற்கனவு வேறொன்றும் இல்லை - என்றார். (அ-ம-26)

## பயங்கரவாதத்தை...

தெரிவித்தார். கிளிநொச்சியைச் சேர்ந்த பாடகர் ஒருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:
விடுதலைப்புலிகள் அமைப்பை ஆதரிக்கும் வகையிலோ அல்லது ஊக்குவிக்கும் வகையிலோ எவரும் செயற்பட முடியாது. அத்தகைய செயற்பாடுகளை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இந்த விடயத்தை நாம் ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துள்ளோம். கிளிநொச்சி இளைஞர் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பில் சட்டமா அதிபருடன், பொலிஸ்மா அதிபர் கலந்துரையாட உள்ளார். அதன்பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## மின்சாரம்...

ஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடைச்சல் தொழிலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. குறித்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட வேளையில் அவர் முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதையடுத்து, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-55)

## அவசரகாலச்...

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கு ஜனாதிபதி அநுரவால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அனுமதி வழங்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 137 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் வழங்கப்பட்டன. இதன்படி, 120 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ-ம-இ)

## நல்லூர்...

என்று தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-
நல்லூர் மந்திரிமனை அழியும் அபாயத்தில் இருந்த நிலையில் அதனை புனரமைப்பு செய்வது தொடர்பாக தற்போது நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் தொல்லியல் திணைக்களத்தினரும் பொதுவான உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றனர். பொதுமக்களின் நிதியைப் பெற்று இதனைப் புனரமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் அதற்கான நிதி தொல்லியல் திணைக்களத்திடம் இல்லை. தொல்லியல் திணைக்களம் அந்தத் திருத்தப் பணிகளைச் செய்யும். அதற்கான நிதியை நாங்கள் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும். அதற்கு ஒரு பொது அமைப்பாக நாங்கள் இணைந்து இதனை செய்ய வேண்டும்.
தொல்லியல் திணைக்களம் நெதர்லாந்து நாட்டின் நிபுணர்களை தொடர்பு கொண்டு நல்லூர் மந்திரிமனை உள்ள பகுதிகளை ஆய்வு செய்துள்ளனர். நல்லூர் மந்திரிமனையின் அபிவிருத்திப் பணிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் தத்தமது கருத்துகளை முன்வைக்க வேண்டும். எழுச்சி பெற்றிருந்த இராசதானியொன்றைப் பாதுகாக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. அந்தக் கடமையில் அரசியல் பேதங்களைக் கடந்து பங்கெடுக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் அழைக்கின்றேன் - என்றார். (அ-ம-26)

## சுரேஷ்...

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் இங்கு கதைக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இடம்பெறும் நடவடிக்கைகள் பக்கச்சார்பான முறையில் உள்ளன. உள்ளூராட்சித் தேர்தலின்போது புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் பாடலே தேசிய மக்கள் சக்தியின் பரப்புரை மேடைகளில் ஒலிக்க விடப்பட்டது. ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தப் பாடலை தமது பேஸ்புக் பக்கங்களில் பகிர்ந்திருந்தனர். ஆனால், புலிகள் தொடர்பில் சொல்லிசைப் பாடல் பாடியதற்காக கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அப்படியென்றால், திசைகாட்டி அரசாங்கத்தின் தேர்தல் மேடையில் ஒலிக்க விடப்பட்ட பாடலுக்கு யார் பொறுப்பு?
தற்போதைய அரசாங்கத்தால் படையினர் தொடர்ச்சியாக இலக்கு வைக்கப்படுகின்றனர். இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். படையினருக்காக முன்னிலையாவோம் - என்றார். (அ-ம-இ)

## நாட்டின்...

நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது - இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்தகால ஆட்சியாளர்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுசென்றதால்தான் சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாறாக விரும்பிப்போய் எவரும் நாணய நிதியத்தை நாடவில்லை. ராஜபக்சக்களே பொருளாதாரக் கொலையாளிகள் என்பதை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் நாட்டை நிர்வகிக்க இயலாதவர்கள்தான் தற்போது கதைகதையாகக் கூறுகின்றனர். நான்கு தென்னை மரங்களுக்கு இடையில் கலந்துரையாடல்களை நடத்திவிட்டு ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பில் கனவு காண்கின்றனர். இவர்களை நம்பி ஆட்சியை ஒப்படைக்கும் நிலையில் மக்கள் இல்லை - என்றார். (அ-ம-இ)

## கோத்தாபயவின்...

ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேவுக்கு எவ்வித சித்திரவதையும் வழங்கப்படவில்லை. அவருக்கு விசேட சலுகைகளும் வழங்கப்படவில்லை. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணையில் சாதாரண நபரொருவருக்கு எதிராக எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படுமோ அவ்வாறான நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை திசைதிருப்ப வேண்டிய தேவைப்பாடு சிலருக்கு உள்ளது. கோத்தாபயவுக்கு எதிராகப் பயணத்தடை விதிக்கப்பட்ட பின்னரேயே அவர்கள் இத்தகைய குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர். இதற்கெல்லாம் நாம் அச்சமடையமாட்டோம். அனைத்து விசாரணையும் உரியமுறையில் இடம்பெறும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதே எமது அரசின் ஒரே நோக்கமாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நிச்சயம் நீக்கப்படும். தற்போது அந்தச் சட்டம் அமுலில் இருப்பதால் அந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை இடம்பெறுகின்றது - என்றார். (அ-ம-இ)

## ஆடி...

மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
நாடாளுமன்ற குழு அறையில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.
இதன்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்ததாவது:-
ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் புனித நாளாகும். ஆடி அமாவாசை புனித நாளில் இந்துக்கள் தமது முன்னோர்களுக்காக, குறிப்பாக இறந்த தந்தையாருக்காக விரதமிருந்து திதி மற்றும் தர்ப்பணம் கொடுத்து தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி ஆசி பெறுகின்றனர். ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் ஆடி அமாவாசை தினத்துக்கு பொதுவிடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. இருப்பினும் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்த பிற்பாடு ஆடி அமாவாசை தினத்துக்குப் பொது விடுமுறை வழங்கப்படுவதில்லை. அந்தவகையில் இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த கடந்தகால ஆட்சியாளர்கள் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான தமது வழிபாட்டுரிமையை மறுத்து வந்துள்ளதாகவே இந்துக்கள் கருதுகின்றனர். மாதம் தோறும் பௌர்ணமிக்கு விடுமுறை வழங்கும் இலங்கை அரசு, வருடத்தில் ஒரு நாள் வருகின்ற ஆடி அமாவாசைக்கு பொது விடுமுறை வழங்க தவறியிருப்பது இந்துக்களுக்கு பெரும் மன வேதனையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆகவே இந்துக்கள் தமது புனித நாளான ஆடி அமாவாசை தினத்தில் இடர்பாடுகளின்றி, நிம்மதியாக வழிபாடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே இந்துக்களின் புனித நாளான ஆடி அமாவாசை தினத்தை பொது விடுமுறை நாளாக இலங்கை அரசு பிரகடனப்படுத்த வேண்டும் - என்றார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கோரிக்கை தொடர்பில் பரிசீலனை மேற்கொண்டு விரைவில் முடிவு அறிவிக்கப்படும் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார். (அ-ம-113)

## தடயப்...

என்புத்தொகுதி ஒன்றிலிருந்தே அந்த நாணயக்குற்றி தடயப்பொருளாக மீட்கப்பட்டுள்ளது. தற்போது அது சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## எட்டு...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணியின் 20ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட 8 சிறுவர்களின் என்புத் தொகுதிகள் உட்பட 9 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன. அத்துடன், ஒரு சிசுவின் என்புத் தொகுதி உட்பட 9 என்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.
இதன்படி செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 327 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 311 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media